*8*

# கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகள் ஆகுதல்: உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள் [பாகம் 2]

## [5:1-11]

*நிருபத்தில் இவ்விடத்தில் பேதுரு, தாம் 2:13ல் தொடங்கியிருந்த கட்டளைகளுக்குத் திரும்பினார். 2:13ல் இருந்து 3:7 வரையிலும் அப்போஸ்தலர், அரசாங்கங்களுக்குக் கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும், எஜமானர்களுக்கு அடிமைகள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும், மற்றும் கணவர்களுக்கு மனைவிகள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்று கிறிஸ்தவர்களுக்குப் புத்திகூறினார். 5ம் அதிகாரத்தில் அவர், இளைஞர்கள் மூப்பர்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவதன் மூலம் அறிவுரையின் அந்த வடிவமைப்பைத் தொடர்ந்தார். இந்த தற்போதய புத்திகூறுதலானது, மேற்கண்ட மூன்றில் மற்ற இரண்டைக்காட்டிலும், கணவர்களுக்கு மனைவிகள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல்களுடன் (3:1-7) அதிகம் ஒத்துப்போவதாக உள்ளது. மனைவிகள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்று ஊக்குவித்தபின்னர், பேதுரு கணவர்களுக்கு அறிவுறுத்தும் வார்த்தைகள் சிலவற்றை அளித்தார். அதற்கு இணையான வார்த்தைகளை அவர், அரசாங்கங்களுக்கோ அல்லது அடிமைகளின் எஜமானர்களுக்கோ அளித்திருக்கவில்லை. இப்போது நாம் படிக்கும் வசனப்பகுதியில் அப்போஸ்தலர், கீழ்ப்படிதலுடன் இருக்கும்படி இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதற்கு முன்னர், மூப்பர்களுக்கு அறிவுறுத்துதலின் வார்த்தைகளை அளித்தார். மற்றும் இவ்விஷயத்தில், அவர் மூப்பர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டிய இளைஞர்களுக்கு அளித்ததைக் காட்டிலும் கணிசமான அளவு அதிகமான அறிவுறுத்துதல்களை மூப்பர்களுக்கு அளித்தார். இது, மூப்பர்கள் கவனிக்க வேண்டிய பொறுப்புகளை ஏற்ற வகையில் நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்துவதாகத் தோன்றுகிறது. இளைஞர்கள் தங்கள் பங்குக்குக் கீழ்ப்படிதலை நிறைவேற்றுதலானது, தக்கவகையில் நடந்துகொள்ளும் மூப்பர்களைப் பொறுத்தது என்று*

தோன்றுகிறது.

## முதியவர்களுக்கு ஊக்குவிப்பு (5:1-4)

**[1]உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: [2]உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், [3]சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். [4]அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.**

*__வசனம் 1.__ "மூப்பர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (presbuteros என்ற) வார்த்தை பொது அர்த்தத்தில் ஒரு வயது முதிர்ந்த மனிதரைக் குறிப்பிடுவதாக இருக்கலாம் (யோவான் 8:9; நடபடிகள் 2:17; 1 தீமோத்தேயு 5:1), அல்லது இது சபையில் அலுவலகரீதியான தலைமைத்துவப் பணிப்பொறுப்பில் செயல்பட நியமிக்கப்பட்டு இருப்பவர்களைக் குறிப்பதாக இருக்கலாம் (நடபடிகள் 11:30; 14:23; 20:17; தீத்து 1:5; யாக்கோபு 5:14). எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு வார்த்தை எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைச் சந்தர்ப்பப் பொருள்தான் தீர்மானிக்க வேண்டும். பேதுரு, __I exhort the elders among you,__ என்று எழுதி, இந்த மூப்பர்களை "மந்தையை மேய்க்கும்படி" வேண்டிக் கேட்டுக்கொண்டு தொடர்ந்தபோது, இங்குள்ள இவ்வார்த்தை சபையின் நடத்துவத்துவ அலுவல் ஒன்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவு. 1 தெசலோனிக்கேயர் 5:12, 13 வசனப் பகுதியில் பின்வருமாறு பவுல் வேண்டுகோள் விடுக்கும் மக்களும் இவர்களே: "அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்."*

*தனிநபர் ஒருவர் நியமனத்தினால் "மூப்பர்" பணியைப் பற்றிக்கொள்ள வந்தார் (நடபடிகள் 14:23; தீத்து 1:5). இவ்வாறு ஏற்படுத்தப்படும் மனிதர் வயதானவராகவோ அல்லது இளைஞராகவோ இருக்கலாம் என்பது தெளிவு. வயதானவராக இருக்கும்படி எவரும் நியமிக்கப்பட இயலாது. இருப்பினும், இந்தப் பணியைச் செய்பவர்கள் "மூப்பர்" என்று அழைக்கப்படும்போது, அவர்கள் முதிர்வயதான மனிதர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்து உள்ளது, இருப்பினும் அது விவரிக்கப்பட வேண்டும். "வயதானவர்" யார் என்ற கருத்தில் சற்றே வளையும் தன்மை இருக்கையில், இச்சொற்றொடர் முடிவில்லாத வகையில் வளையும் தன்மை கொண்டிருப்பதில்லை. பதினெட்டு வயதான அல்லது முப்பது வயதான ஒருவரை "முதிர் வயதான மனிதர்" என்று எவரும் கருதுவது இல்லை. சபையில் நடத்துனர்களாகப் பணிசெய்ய வேண்டியவர்கள் அதன் "மூப்பர்கள்" என்று அழைக்கப்படுகையில், அவர்கள்*

முதிர் வயதான மனிதர்களாக இருக்க வேண்டும் என்ற மறைகருத்து உள்ளது.

"ஆசாரியர்" என்று ஆங்கில வார்த்தை, "மூப்பர்கள்" என்பற்கான கிரேக்க வார்த்தையுடன் சொல் இலக்கண வகையில் பிணைக்கப்பட்டுள்ளது, ஆனால் புதிய ஏற்பாட்டில் மூப்பர்களாகப் பணி செய்தவர்கள், இன்றைய நாட்களில் சில சபைகளில் பணிசெய்கிற குருக்கள் போன்றவர்களாக இருந்தது இல்லை. மேலும், இளைஞர்களை "மூப்பர்கள்" என்று குறிப்பிடும் நவீன கால நடைமுறை எதுவும் வேதாகம ரீதியான ஆதாரம் கொண்டிருப்பதில்லை. மனிதர்கள் மூப்பராக நியமிக்கப்படுகிறபோது, வயது மாத்திரமே ஒரே ஒரு காரணியாக இருப்பதில்லை, ஆனால் வயது பொறுத்தமற்றதாக இருப்பதும் இல்லை. புதிய ஏற்பாட்டுப் பயன்பாட்டில், மூப்பர் பணியைச் செய்யும் ஒருவர் தமக்காகப் பதிவு ஒன்றை நிலைநாட்டப் போதிய அளவுக்கு வயதானவராக இருந்தார். அவரது பதிவானது அவரது நேர்மைக்கும் நற்தன்மைக்கும் சான்றளிக்கப் போதுமானதாக இருந்தது. வயதில் இளையவரான ஒரு மூப்பர் ஒரு முரண்தொடையாக இருக்கிறார். வழிகாட்டுதல் மற்றும் அதிகாரம் ஆகியவை கொண்ட அலுவல்களில் பணியாற்ற, சமுதாயங்கள் தங்களின் முதிர்வயதான மனிதர்களைக் கண்ணோக்கியது யூதத்துவத்தில் மட்டும் அல்ல, பிற சமூகங்களிலும் காணப்பட்டது. ரோமானியர்கள் குறைந்த பட்சம் குடியரசுக் காலத்தில், செனேட் என்ற மாமன்றத்தினால் பெரிதும் ஆளப்பட்டனர். "செனேட்டர்" என்ற வார்த்தை நேரடிப்பொருளில் "ஒரு முதிய மனிதர்" என்றே அர்த்தப்படுகிறது. இதே லத்தீன் வேர்வார்த்தையில் இருந்துதான் "செனைல்" என்ற வார்த்தையும் வருகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியல் அமைப்பில், பிரதிநிதிகளில் அலுவலகத்தில் பணியாற்றுபவர்களைக் காட்டிலும் செனேட்டர்களாகப் பணியாற்றுபவர்கள் அதிகம் வயதுடையவர்களாக இருக்க வேண்டும் என்றுள்ளது தற்செயலானதல்ல.

வயதில் முதிய மனிதர்கள் நடத்துனர்களாகப் பணியாற்றுதல் என்ற பாரம்பரியம், இஸ்ரவேல் வரலாற்றில் ஆழமாக ஓடுகிறது. போவாஸ் ஒரு சுதந்தரித்துக் கொள்ளுதலின் விஷயத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்பியபோது, அவர் பட்டண வாசலில் நகரத்து மூப்பர்களுடன் அமர்ந்தார் (ரூத் 4:2), அவர்கள் அந்த நகரின் ஒழுக்கரீதியான விஷயங்களுக்கும் சட்டப்பூர்வமான விஷயங்களுக்கும் நடத்துனர்களாக இருந்தனர். இஸ்ரவேலின் மூப்பர்கள்தாம், அந்த மக்களுக்கு ஒரு அரசரை நியமிக்கும்படி சாமுவேலிடம் கேட்டுக்கொள்ள ஒன்றுகூடினர் (1 சாமுவேல் 8:4, 5). மூப்பர்கள் என்பவர்கள் இஸ்ரவேலில் நடத்துவத்துடன் ஒருபொருள் கொண்டிருந்தனர் என்று கூறுதல் பாதுகாப்பானதாக உள்ளது. சுவிசேஷங்கள் மற்றும் நடபடிகள் ஆகிய புத்தகங்களில், மூப்பர்கள் என்பவர்கள் யூதர்கள் மத்தியில் தலைவர்களாக இருந்தனர் (உதாரணத்திற்கு, மத்தேயு 15:2; 16:21; மாற்கு 8:31 ஆகிய வசனங்களை காண்க). இந்தப் பின்புலத்திற்கு எதிரில்தான் சபையில் மூப்பர்கள் பணிசெய்தனர். அவர்கள் அதன், முதிர்வயதான, ஞானமுள்ள மனிதர்களாக இருந்து, தங்கள் சமூகத்தில் மரியாதையைச் சம்பாதித்து இருந்தனர். ஒரு கருத்தில் மூப்பர்கள் உதிக்கின்றனர். சமூகமானது, அறிவுரைக்காக அவர்களிடமாய்த் திரும்புகையில், அவர்கள் மூப்பர்கள் என்ற வகையில் பணிசெய்கின்றனர், மற்றும் அவர்கள் தங்கள் பணியைத் தொடர

நியமிக்கப்படும்போது, அலுவலகரீதியான அங்கீகரிப்பைப் பெறுகின்றனர்.[1] யாக்கோபு நிருபத்தில் உள்ள யூதத்துவ வாசனையைக் கருத்தில் கொண்டு காணும்போது, இந்த அலுவல் செய்பவர்களை "மூப்பர்கள்" என்று கர்த்தருடைய சகோதரர் அழைக்க வேண்டியிருந்தது திகைப்புக்குரியது என்பது அரிது (யாக்கோபு 5:14).

பேதுரு **"உங்களிலுள்ள மூப்பருக்கு"** என்று புத்திகூறியபோது, சபையில் நடத்துவத்துவப் பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டு அதை ஏற்றுக்கொண்டிருந்த வயது முதிர்ந்த மனிதர்களுக்கு அதைக் கூறினார். புதிய ஏற்பாட்டில், மூப்பர்கள் தங்களை நியமித்த சமூகத்துடன் பணிசெய்தனர். எபேசு சபையில் பணிசெய்த மூப்பர்கள் இருந்தனர் (நடபடிகள் 20:17) மற்றும் எருசலேம் சபையில் பணிசெய்த மூப்பர்கள் இருந்தனர் (நடபடிகள் 11:30). மூப்பர்கள் தாங்கள் பணியாற்றிய சமூகத்திற்குப் புறம்பே எந்த ஒரு தலைமைத்துவத்தை அல்லது அதிகாரத்தைச் செயல்படுத்தியதாகக் குறிப்பு எதுவும் இல்லை. பெரிய அளவு மூப்பர்கள் என்று யாரும் இருக்கவில்லை. அந்த ஆழ்ந்த சிந்தனை ஒரு கேள்வியைக் கொண்டுவருகிறது. பேதுரு தம்மை **உடன் மூப்பர்** என்று அழைத்துக்கொண்டபோது, அவர் ஏதேனும் குறிப்பிட்ட ஒரு சபைக் குழுமத்திற்கு மூப்பராகப் பணிசெய்தார் என்று அது கருத்துத் தெரிவித்ததா?

ஒருவேளை பேதுரு, அப்போஸ்தலர் என்ற தமது திறத்தில், பணிசெய்த சமூகம் மற்ற எந்த சபைக்குழுமத்தைக் காட்டிலும் பெரிதாக இருந்திருக்கலாம். இதற்கு மறுபுறத்தில், பேதுரு எருசலேமில் அல்லது ரோமாபுரியில் இருந்த சபையின் மூப்பர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கலாம். ஒருவேளை இந்தப் பணித்திறத்தில் அவர் தம்மை "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும்" என்று அழைத்திருக்கலாம். மூப்பர் என்ற வகையில் பேதுருவின் பணி என்பது சாதாரணப் பணியைவிட அப்பால் சென்றது என்பது தெளிவாக உள்ளது. மூப்பர்கள் தங்கள் நடத்துவத்துவத்தையும் தங்கள் ஊழியத்தையும் தங்களை மூப்பராக நியமித்த, தாங்கள் பணிசெய்த சமூகத்தின் எல்லைக்குள் செயல்படுத்தினர்.

மூப்பர்களைப் பேதுரு "உடன் மூப்பர்" என்று குறிப்பிட முடிந்தது, ஆனால் அவர்களின் அதிகாரத்துவமும் நடத்துவத்துவமும் அவர்களுக்கு அப்பால் சென்றது என்ற வகையிலும் அவர்களை அவர் குறிப்பிட்டார். அவர் ஒரு அப்போஸ்தலராக இருந்தார், அது மற்ற விஷயங்களின் மத்தியில் அவர் **கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியாக** இருப்பதைத் தகுதிப்படுத்திற்று. சுவிசேஷப் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள, பேதுரு மற்றும் இயேசு ஆகியோருக்கு இடையில் உள்ள வளமான வரலாற்றுடன் கண்ணோக்கும்போது, கர்த்தருடன் அப்போஸ்தலர் கொண்டிருந்த தமது தனிப்பட்ட உறவைப் பற்றி மறைமுகக் கருத்து எதையும் ஏற்படுத்தாது இருத்தல் வினோதமானதாக உள்ளது. 2 பேதுரு நிருபத்தில், அவர் இதைச் செய்தார் (2 பேதுரு 1:16-18), ஆனால் இந்த நிருபத்தில் அவ்வாறு செய்யவில்லை. சிலுவையில் அறையப்பட்டது தவிர, இயேசுவின் வாழ்வில் இருந்து நிகழ்வு எதையும் அப்போஸ்தலர் குறிப்பிடாது இருக்கையில், அவர் தம்மைக்குறித்து "பாடுகளுக்குச் சாட்சி" என்று குறிப்பிட்டார். விஷயம் அவ்வாறு இருக்க, திறவு வார்த்தைகளில் ஏற்படுத்தப்பட்ட உரிமை கோருதலுக்கு இது பலத்த ஆதரவைக் கூட்டுகிறது. இந்த நிருபம் சுவிசேஷப்

புத்தகங்களில் இருந்து நாம் அறிகிற அப்போஸ்தலரின் கையில் இருந்து வருகிறது.

J. N. D. கெல்லி அவர்கள் (லுத்தரையும் கால்வினையும் ஆதரித்து) "கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சி" என்பதன் மூலம் எழுத்தாளர் [பேதுரு], தாம் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்கத் தொடர்ந்ததாக அர்த்தப்படுத்தியதாக விவாதித்தார். கிறிஸ்துவின் பாடுகளில் பங்காளியாக இருந்தார் என்ற கருத்தில் அவர் ஒரு சாட்சியாக இருந்தார்.[2] இதற்கு முன்னும் பின்னும் உள்ள சொற்றொடர்கள், இந்த எழுத்தாளர் தமது வாசகர்களின் நிகழ்வுகளுக்குப் பங்காளியாக இருந்ததைப் பற்றிக் கவனத்தை ஈர்க்கின்றன என்பது உண்மையே. இந்தச் சொற்றொடரிலும்கூட, பேதுரு தமது வாசகர்களுக்கு, தாமும் அவர்களும் பாடு அனுபவித்தல் மூலம் கிறிஸ்துவின் பாடுகளில் ஒன்றாகப் பங்கேற்றதை - ஒன்றாகச் சாட்சியாயிருந்ததை - நினைவூட்டி இருக்கலாம். இருப்பினும் "சாட்சி" (*martus*) என்ற வார்த்தை பொதுவாக, நிகழ்வுகள் பற்றிய வாய்மொழி சாட்சியத்தினால் தொடரப்படுவதாக உள்ளதான, ஒருவர் அனுபவிக்கும் நிகழ்வுகளைக் குறிக்கிறது. இந்த நிருபத்தில் அப்போஸ்தலர், கிறிஸ்து பாடு அனுபவித்த வகைக்கு ஏற்கனவே சாட்சி அளித்திருந்தார் (2:21-24). இந்தச் சொற்றொடரானது, எழுத்தாளர் தாம் கிறிஸ்துவின் பாடுகளைத் தாமே கண்டதை வாசகர்கள் அறிய விரும்பினார் என்று அர்த்தப்படுவதாக எடுத்துக் கொள்வதே சிறந்ததாகும்.

அப்போஸ்தலரின் வார்த்தைகள் பொதுமையில் இருந்து குறிப்பானதாகச் செல்கின்றன, மற்றும் பொதுமைக்குத் திரும்புகின்றன. மூப்பர் என்ற வகையில் அவர் மற்ற மூப்பர்களைக் குறிப்பிட்டார், ஆனால் அவர், கண்ணால் கண்ட சாட்சி மற்றும் அப்போஸ்தலர் என்ற வகையில் இதை திட்டவட்டமாகச் செய்தார் (1:1). மிகவும் முக்கியமாக அவர், அவர்களை சகவிசுவாசிகள் என்ற வகையில், **இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிறதாகக்** குறிப்பிட்டார். பேதுருவும் கூட, தமது வாசகர்களைப் போன்றே கர்த்தருடைய மறுவருகையை, அவரது மகிமையான வெளிப்பாட்டை மற்றும் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை முன்னெதிர் நோக்கினார். அப்போஸ்தலர் ஒரு புறம்பான மனிதர் போன்று அறிவுரை தரவில்லை அல்லது அவர் தாம் வாழ்வின் வசதி களை மகிழ்வுடன் அனுபவித்துக் கொண்டு, பாடு அனுபவித்தவர்களுக்கு அறிவுரை தரவில்லை. அவர்களில் அவரும் ஒருவராயிருந்தார். அவர் ஒரு உடன் மூப்பராக இருந்தார், மற்றும் அவர்களைப் போன்றே அவரும் தமது ஆத்துமாவை, உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கு ஒப்புக்கொடுத்திருந்தார்.

**வசனம் 2.** ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்றைப் பயன்படுத்துதல் என்பது சிலவேளைகளில், கிரேக்க மொழியில் தெளிவாக உள்ள வார்த்தைகளின் உறவைக் காண்பதில் சிரமத்தை ஏற்படுத்துகிறது. உதாரணமாக, **மேய்த்து** என்ற கட்டளை வினைச்சொல்லானது, *poimainō* என்பதில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *Poimēn* என்ற பெயர்சொல் எபேசியர் 4:13ல் "மேய்ப்பர்" , "போதகர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேய்ப்பராகச் செயல்படுதல் என்பது ஒரு ஆடுமேய்ப்பவராக இருத்தல் என்பதாக உள்ளது. இவ்வசனத்தின் தொடக்கப்பகுதியை ஒருவர், மந்தைக்கு "மேய்ப்பராக" அல்லது "மேய்ப்பவராக" இருக்க வேண்டும் என்றும் மொழிபெயர்க்க முடியும். மேய்ப்பரின் பணியைச் செய்ய வேண்டும் என்று பேதுரு வேண்டிக்

கேட்டுக்கொண்டிருந்தவர்கள், ஏற்கனவே அவரது உடன் மூப்பர்கள் என்று அழைக்கப்பட்டிருந்தனர். நமக்கு முன்பாக உள்ள வசனப்பகுதி மாத்திரமல்ல, ஆனால் புதிய ஏற்பாட்டின் வேறொரு இடத்திலும், "மூப்பர்கள்" என்பவர்கள் "மேய்ப்பர்களுக்கு" சமமானவர்கள் என்பது தெளிவாக உள்ளது. வார்த்தைகளை ஒன்றுடன் ஒன்று கலக்கும் இதே செயல் நடபடிகள் 20ம் அதிகாரத்திலும் காணப்படுகிறது. எபேசு சபையில் இருந்த மூப்பர்களை மிலேத்துவுக்கு வரும்படி பவுல் ஆள் அனுப்பினார் (நடபடிகள் 20:17). மற்ற விஷயங்களுடன் அவர், அவர்களிடம் தேவனுடைய சபையை "மேய்க்கும்படி" புத்திகூறினார் (நடபடிகள் 20:28). பேதுரு 5:2ல் உள்ள "மேய்த்தல்" என்ற அதே கிரேக்க வினைச்சொல், நடபடிகள் 20:28லும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சபையின் ஆவிக்குரிய நடத்துனர்களாகப் பணியாற்ற வேண்டியிருந்தவர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட எல்லா வார்த்தைகளிலும் ("மூப்பர்கள்," "மேய்ப்பர்கள்" அல்லது "கண்காணிகள்"), "மேய்ப்பர்கள்" என்பதைக் காட்டிலும் அதிகம் வண்ணமிக்கதோ அல்லது அதிகம் விவரிப்பானதோ வேறு எதுவும் இல்லை. இஸ்ரவேல் மக்களைப் பொறுத்தமட்டில், மேய்ப்பன் தனது மந்தையை மேய்த்தல் என்பது அவர்களின் புராதன காலத்திலிருந்தே அறியப்பட்டதாக இருந்தது, மேய்ப்பனாக இருந்து அரசரான தாவீது, தேவனுடைய மக்கள் இளையவர்களாகவும் பெருகுபவர்களாகவும் இருந்த காலத்தை நோக்கிப் பின்னோக்கிச் சென்றார். சங்கீதம் 23, தேவனை அவரது மக்களாகிய இஸ்ரவேலின் மேய்ப்பர் என்ற வகையில் கண்ணோக்கிற்று சாலொமோனின் உன்னதப்பாட்டு இஸ்ரவேலின் காதல் பாடல்கூட மேய்ப்பனின் உருவகத்தினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டு இருந்ததை விவரிக்கிறது, மிகவும் நினைவுகூரத்தக்கதான இயேசுவின் உவமைகளில் சில, பல நூற்றாண்டுகளாக வளர்ந்து பெருகியிருந்த மரபுவழிக் கதைகளின் மீது வரையப்பட்டன. மேய்ப்பன் தனது மந்தையோடு நாள் முழுவதும் வாழ்ந்து வந்தான். அவற்றில் ஒன்று இழந்துபோகப்படும்போது அல்லது வியாதிப்படும்போது அதை அவன் அறிந்திருந்தான். அவற்றை அவன் பாதுகாத்து அவற்றின் மீது கவனம் கொண்டிருந்தான். அப்போது அவைகள் அவனது பிழைப்புக்கு அடுத்தவையாகவும் அவனது பிரியத்துக்கு உரியவையாகவும் இருந்தன.

மேய்ப்பன் மற்றும் அவனது ஆடுகள் என்ற மாதிரியானது சபையின் ஆவிக்குரிய நடத்துவத்துவத்தில் உணர்ந்தறியப்படும்போது, மூப்பர்கள் தாங்கள் மேய்க்கும் **மந்தையின்** ஆவிக்குரிய, உணர்வுப்பூர்வமான மற்றும் உடல்சார்ந்த தேவைகளை அறிவார்கள். அவர்கள் அவற்றை நீதி மற்றும் சத்தியத்தின் பாதைகளில் நடத்தி வழிகாட்டுவார்கள். அவர்கள், பிரதான மேய்ப்பரான இயேசுவின் மீது சார்ந்திருப்பார்கள் (5:4; 2:25), மற்றும் அவர்கள் சபையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும், தேவபக்தியின் மாதிரியாக இருப்பார்கள். மேய்ப்பர் எந்த வேளையிலும் ஓய்ந்திருப்பதில்லை. அவர் எப்போதும் அங்கிருக்கிறார், எப்போதும் தனது பொறுப்புகள் பற்றிக் கவலை கொண்டிருக்கிறார், எப்போதும் அவற்றைப் பாதுகாப்பவராகவும் குணமாக்குபவராகவும் இருக்கிறார். அவரது பொறுப்பில் உள்ள ஒருவர் பலவீனமாகும்போது, அவரது ஆவிக்குரிய காயங்களைக் கட்டுவதற்கு மேய்ப்பர் அங்கு இருக்கிறார். மூப்பர்கள் கூட மிகவும் அடிக்கடி தங்கள்

மாதிரியை, தங்கள் மந்தைகளை மேய்க்கும் மேய்ப்பர்கள் உள்ள வயல் வெளிகளில் காண்பதற்கு மாறாக, இயக்குனர்களின் கூட்டுறவுக் கழகத்தில் காணுதல் என்பது துரதிர்ஷ்டவசமானதாக உள்ளது.

சபையில் ஆவிக்குரிய நடத்துனர்களாக இருக்க வேண்டியவர்கள் பற்றியும் "மூப்பர்" மற்றும் "மேய்ப்பர்" என்ற வார்த்தைகளில் அவர்கள் எவ்வாறு பணிசெய்ய வேண்டும் என்பது பற்றியும் பேதுரு சிலவற்றைக் கூறியிருந்தார். இந்தப் பண்புகளுக்குப் பின்னால்தான் அவர், **கண்காணிப்புச் செய்யுங்கள்** என்பதைக் கூடுதலாகக் கூறினார், இதன் வினைவடிவம் கிரேக்க மொழியில் நுட்பம் சார்ந்த வகையில் ஒரு எச்சவினையாக இருக்கையில், இது "மேய்ப்பராக இருங்கள்" என்பதற்கு இணையான ஒரு கட்டளையாகப் புரிந்துகொள்ளப்படுதல் என்பது, இலக்கணரீதியாகச் சாத்தியமற்றதாக உள்ளது. இந்த விஷயத்தில், மொழிபெயர்ப்பானது "Be a shepherd to the flock of God which is among you and exercise the oversight." என்று இருக்கும். "கண்காணிப்புச் செய்யுங்கள்" என்ற சொற்றொடரானது, *episkopeo.* என்ற கிரேக்க வினைச்சொல்லின் எச்சவினைக்குரிய வடிவமாக உள்ளது. இவ்வார்த்தையின் பெயர்ச்சொல் வடிவமான *episkopos* என்பது, நடபடிகள் 20:28, 1 தீமோத்தேயு 3:2 மற்றும் வேறொரு இடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. KJV வேதாகமம் இந்தப் பெயர்ச்சொல்லை "bishop," என்று மொழிபெயர்த்துள்ளது, ஆனால் NASB மற்றும் NIV ஆகிய வேதாகமங்கள் இதை "overseer." என்று மொழிபெயர்த்துள்ளன.[3] பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் மாத்திரம் பவுல் தமது வாழ்த்துரையில் "கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார் (பிலிப்பியர் 1:1).

கிறிஸ்துவின் சபையை வழிநடத்த வேண்டியவர்களைக் குறிப்பதற்கு, ("மூப்பர்," "மேய்ப்பர்," "கண்காணி" என்ற) மூன்று வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவைகள் ஒரு ஆர்வமிக்க வண்ணத்தை வரைகின்றன. "கண்காணி" என்ற வார்த்தை, சபையை வழிநடத்துபவர்கள் அதிகாரம் செலுத்த வேண்டும் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. அவர்களின் அதிகாரம் என்பது, பட்டயங்கள் அல்லது துப்பாக்கிகளினால் ஏற்படுவதல்ல, ஆனால் அதற்கு மாறாக, அவர்களின் ஆவிக்குரிய மற்றும் ஒழுக்கரீதியான உதாரணத்தினால் ஏற்படுவதாகும். கடினமான கலந்துரையாடல்கள் ஏற்படவேண்டிய வேளைகள் சபையில் உள்ளன. அந்த வேளைகள் வரும்போது, சபையின் கண்காணியானவர் தேர்வுகளை ஏற்படுத்தும்படி நியமிக்கப்படுகிறார். அவர்களை சபையானது ஊக்குவிக்கவும் ஆதரிக்கவும் வேண்டும். பவுல், "அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்" என்று எழுதினார் (1 தெசலோனிக்கேயர் 5:12, 13).

சபையில் மூப்பராகப் பணிசெய்தலுக்கு கணிசமான அளவு ஆற்றலையும் நேரத்தையும் ஒப்புக்கொடுத்தல் தேவைப்படுகிறது. சிலவேளைகளில் இது ஒரு நன்றிக்குரியது அல்லாத வேலையாக உள்ளது. மூப்பர்கள் சில வேளைகளில் சபையினால் நிதி ஆதரவு பெறுகின்றனர், ஆனால் வழக்கமாக அவர்கள் அவ்வாறு பெறுவதில்லை. அவர்கள் அன்பினால் ஊழியம் செய்கின்றனர்.

அவர்கள் கர்த்தரை மகிமைப்படுத்தவும் அவரது மக்களைக் கட்டியெழுப்பவும் விரும்புவதால், தாங்கள் செய்யும் பொறுப்பை மேற்கொள்கின்றனர். மனிதர்களின் ஆத்துமாக்களை மீட்பதில் கர்த்தருக்குப் பங்காளிகளாக இருக்க அவர்கள் விரும்புகின்றனர். அது **கட்டாயமாய் மேற்கொள்ள வேண்டிய** பணியல்ல. தேவபக்தியுள்ள மனிதர்கள், ஊழியத்தை மனவிருப்பத்தோடும், ஊக்கத்தோடும் **மனப்பூர்வமாயும்** மேற்கொள்கின்றனர். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி" என்று கூறினார் (எபிரெயர் 13:17). நல்ல மனிதர்கள் மூப்பத்துவத்தின் ஊழியத்தை ஏற்றுக்கொள்ளத் தவறுகிறபோது, குறைவான தகுதி உடையவர்களுக்கு அவர்கள் கதவைத் திறந்து விடுகின்றனர். இவ்வாறு நடக்கையில் பெரும்பாலும் விளைவு மோசமானதாக உள்ளது.

மூப்பர்கள் சபைகளினால் நிதி உதவிகொண்டு ஆதரிக்கப்படுதல் என்பது நவீனகாலத்தில் அசாதாரணமானதாக இருந்தாலும், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் அது சாதாரணமானதாக இருந்தது. மூப்பர் என்பவர் "இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவரா" க இருக்கக்கூடாது என்று தீமோத்தேயுவுக்குப் பவுல் கூறினார் (1 தீமோத்தேயு 3:3). உதவிக்காரர்கள் "இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களா" க இருக்கக்கூடாது (1 தீமோத்தேயு 3:8), மற்றும் மூப்பர்களும் அதுபோல் இருக்கக்கூடாது (தீத்து 1:7). மூப்பர்களும் உதவிக்காரர்களும் தாராளமனப்பான்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று மாத்திரம் இவ்வார்த்தைகள் அர்த்தப்படுத்துகையில், மூப்பர்கள் மற்றும் ஒருவேளை உதவிக்காரர்களும்கூடத் தங்கள் ஊழியத்திற்குக் கைமாறு அளிக்கப்பட வேண்டும் என்பது பொதுவான விஷயமாக இருந்தால் பவுல் அவர்களுக்கு இவ்வாறு எழுதினார். வேறொரு வேலை செய்தல் போல சபையிலும் மூப்பர்கள் பணிசெய்வதைப் பவுல் விரும்பவில்லை.

மூப்பர்கள் நிதி உதவியைப் பெறவேண்டும் என்று பவுல் எதிர்பார்த்தார் என்பதற்கு இன்னொரு குறிப்பு 1 தீமோத்தேயு நிருபத்தில் பிற்பாடு வருகிறது. பிரசங்கித்தலும் போதித்தலிலும் கடினமாக உழைக்கும் மூப்பருக்கு இரட்டிப்பான கனம் கொடுக்கும்படி பவுல் தமது உடன் ஊழியக்காரரும் இளைஞருமான தீமோத்தேயுவுக்கு புத்திகூறினார். பிரசங்கியார்களுக்கு உதவிசெய்தல் என்ற பாடக்கருத்தைக் கொரிந்தியர்களுக்கு எழுதியபோது பயன்படுத்திய அதே மொழிநடையை அவர் இங்கு பயன்படுத்தினார். "போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக" என்ற உபாகமம் 25:4ஐ அப்போஸ்தலர் மேற்கொள் காண்பித்தார், பின்பு அவர் "வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்" என்று கூடுதலாகக் கூறினார் (1 தீமோத்தேயு 5:18; காண்க 1 கொரிந்தியர் 9:9, 14). 1 கொரிந்தியர் நிருபத்தில் பவுல், பிரசங்கியார்களைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார்; 1 தீமோத்தேயு நிருபத்தில் அவர் மூப்பர்களைப் பற்றிப் பேசினார். இவ்விரு விஷயங்களிலும் உழைப்பவர் தமது கூலிக்குப் பாத்திரராக இருக்கிறார்.

பவுலைப்போன்றே பேதுருவும், மூப்பர்கள் கர்த்தருக்கென்று பிரயாசப்படுகையில் நிதி உதவி பெற வேண்டும் என்று எதிர்பார்த்ததாகக் காணப்படுகிறது. மூப்பர்கள் **அவலட்சணமான ஆதாயத்திற்காக** ஊழியம் செய்யக்கூடாது என்று அவர் கூறியது ஏன் என்பதை அது விளக்கப்படுத்தும். அதற்குப்பதிலாக அவர்கள் **உற்சாக மனதோடு** ஊழியம் செய்ய வேண்டும்.

சபையானது தனது மூப்பர்களுக்கு நிதி உதவியைக் கட்டாயம் தரவேண்டும் என்று முடிவை நாம் தரவழைத்துவிடக்கூடாது. இருப்பினும், அந்த நடைமுறை நல்லதே என்று பவுலும் பேதுருவும் நியாயமான வகையில் தெளிவாக்கினர். இல்லையென்றால், ஆதாயத்திற்காக ஊழியம் செய்தல் பற்றிய புத்திமதிக்கு இங்கு எவ்வித காரணமும் இருக்காது. மூப்பர்கள் தங்கள் ஊழியத்திற்காக நிதி உதவி பெறுதல் என்பது சாதாரணமானதாக இருந்ததால் இந்த புத்திமதி ஏற்புடையதாகவே இருந்தது. நவீன கால சபையும் இதையே செய்ய வேண்டுமா? பவுலும் பேதுருவும் எழுதிய வேளையில் இருந்ததைப் போன்றே, அது சூழ்நிலைகளைப் பொறுத்ததாக உள்ளது. முழுநேர ஊழியம் செய்ய வேண்டி இருந்தது என்றால், மற்றும் அந்தப்பொறுப்பை மேற்கொள்ள மூப்பர் ஒருவர் முன்வருவார் என்றால், அவருக்கு உதவி அளிக்க வேதாகம முன்னுதாரணம் தெளிவாக உள்ளது. சில விஷயங்களில், சுவிசேஷகரும்கூட மூப்பரின் பணியில் ஊழியம் செய்யலாம். மூப்பரோ அல்லது பிரசங்கியாரோ, அவருக்கு ஊழியம் செய்ய முழுநேரப் பொறுப்புத் தரப்படுகையில், “வேலை செய்பவர் கூலிக்குப் பாத்திரராக இருக்கிறார்.”

நவீன காலங்களில், பிரசங்கியார்கள் அல்லது மூப்பர்கள் (மூப்பர்கள் ஊழியம் பெறுகிறபோது) ஐக்கிய அமெரிக்க நாட்டின், ஊதியம் கவன ஈர்ப்பில் இருக்கும்போது, அவர்கள் அளவீட்டில் உயர்ந்த பகுதியில் இருக்கவில்லை. அவர்களில் பெரும்பான்மையானவர்கள், ஒருசில பிரச்சனைகளை மாத்திரம் கொண்டிருந்து மற்றொரு தொழிலில் பயிற்றுவிக்கப்பட்டிருந்தால் கணிசமான அளவு அதிக ஊதியம் பெற்றிருக்க முடியும். ஒருவேளை அது மிகச்சிறந்த வழியாக இருக்கலாம். யோவான் சுவிசேஷப் புத்தகத்தில், கூலியாளுடன் ஒப்பிடப்பட்ட மேய்ப்பன் பற்றிய உவமை ஒன்றை இயேசு கூறினார் (யோவான் 10:11-15). ஊதியத்திற்காக மாத்திரம் ஊழியம் செய்பவர்களுக்குத் தேவனுடைய இராஜ்யத்தில் இடமில்லை. வயது முதிர்ந்த பிரசங்கியார்களிடம் அவர்களின் ஊதியம் பற்றி யாரேனும் கேள்வி கேட்டபோது, அவர்கள் (ஊழியக்காரர்கள்) அவமானப்படுத்தப் பட்டிருக்கின்றனர். உடனே அவர்கள் தாங்கள் ஊதியத்தை அல்ல, மாறாக உதவியையே பெறுவதாக அறியச்செய்வர். “நான் பிரசங்கிப்பதற்கு யாரேனும் எனக்கு ஊதியம் தரமுடியும் என்றால், நான் பிரசங்கியாதிருப்பதற்கும் அவர்கள் ஊதியம் தர முடியுமே” என்று அவர்கள் கூறுவார்கள். ஊதியத்திற்கும் உதவிக்கும் இடையே உள்ள வித்தியாசம் உண்மையில் ஒரு மழுப்புதலாகத் தான் உள்ளது என்று சிலர் விவாதிப்பார்கள். ஒருவேளை, ஆனால் பவுலும் பேதுருவும், சபையில் ஊழியம் செய்பவர்கள் வாரக்கடைசியில் ஒரு ஊதியக் காசோலைக்குப் பதிலாக அதிக நிலைப்பாடுள்ள விஷயத்திற்காக உழைக்க வேண்டும் என்று விரும்பினர்.

**வசனம் 3.** அரசியல்ரீதியான அலுவலகப்பணி, வியாபார நிறுவனம் அல்லது சபை ஆகியவற்றில் தனிநபரின் கைகளில் அதிகாரம் வைக்கப்படும்போது, தவறாகப் பயன்படுத்துதலுக்கு வலிவான வாய்ப்பு உள்ளது. அதிகாரம் கையளிக்கப்படவில்லை என்றால் அதிகாரம் இன்றி நடத்துவத்துவம் என்பது சாத்தியமற்றதாகும். சிலவேளைகளில் இந்த அதி காரம் என்பது, தனிநபர் தமது சொந்த நோக்கத்திற்குச் செயல்படும்படி பயன்படுத்தப்படக்கூடும். பொறுப்பான நடத்துவத்துவம் இன்றி எதையும் செய்தல் என்பது கடினமானது மற்றும் சாத்தியமற்றது என்பவற்றிற்கு

இடையில் எங்கோ இருப்பதால், சபையானது தன்னை, பொறுப்புள்ள தகுதிநிலைகளுக்குத் தான் தேர்ந்தெடுத்தவர்களிடம் ஒப்புவிக்கிறது. அதனால்தான் பேதுருவின் எச்சரிக்கை அவசியமாக இருந்தது. மூப்பர்கள் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட **சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக** இருக்கக் கூடாது என்று அப்போஸ்தலர் கூறினார்.

மூப்பர்கள் முதலாளிகள் அல்ல. தங்களைக் கிரயத்திற்குக் கொண்ட கர்த்தருக்கு முதலாவது ஒப்புக்கொடுத்தல் உள்ள ஆவிக்குரிய குடும்பத்தை அவர்கள் வழிநடத்துகின்றனர் (1 கொரிந்தியர் 6:20). அரசியல் தலைவர்கள் செய்வது போன்று மூப்பர்கள் காவல்துறை அதிகாரத்தின் செல்வாக்குப் பெற்றிருப்பதில்லை. ஒரு வியாபார நிறுவனத்தில் செய்வது போல அவர்கள் சபையைப் பணத்தைக் கொண்டு கட்டுப்படுத்துவதில்லை. அவர்கள் தங்களின் ஒழுக்கரீதியான நெறிமுறை மற்றும் ஆவிக்குரிய பிரசன்னம் மற்றும் இயேசுதங்களுக்குக்கொடுத்ததயவுள்ளஅதிகாரத்தினால்சபையைவழிநடத்துகின்றனர். மூப்பர் பணியை ஏற்றுக்கொள்ளுதல் என்பது ஒரு பிரபுவாக ஆவதல்ல; அது ஒரு ஊழியக்காரர் ஆவதாகும். பேதுரு கர்த்தர் பின்வருமாறு கூறியதன் அடிப்படையில் இந்தப் புத்திமதியை மூப்பர்களுக்குக் கூறியிருக்கக் சாத்தியக்கூறு உள்ளது:

> புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன் (மாற்கு 10:42, 43).

இயேசு மற்றும் பேதுரு ஆகிய இருவருமே "இறுமாப்பாய் ஆளுகிறார்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட இடத்தில் (*katakurieu*.. என்ற) அதே கிரேக்க வார்த்தையையே பயன்படுத்தினர்.

"உங்களிடத்திலுள்ள" ["your charge"] என்பதன் அர்த்தம் பற்றிக் கணிசமான அளவு கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. மூப்பர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட "charge" [பொறுப்பு] என்பதன் இயல்பு என்னவாக உள்ளது? "Your" என்ற வார்த்தை NASB வேதாகம மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டுள்ளது என்பதை உணர்ந்தறிதலுடன் இந்த சிரமம் மிகவும் தெளிவாகிறது, மற்றும் "charge" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை "charges" (*tōn klērōn*) என்று பன்மைச் சொல்லாக உள்ளது. இவ்வார்த்தை நேரடியாக "சீட்டுகள்" என்று அர்த்தப்படுகிறது, உதாரணமாக, யூதாஸின் இடத்திற்கு அப்போஸ்தலராக இருக்கும்படி மத்தியா தேர்ந்துகொள்ளப்பட்ட வேளையில் சீட்டுப் போடப்பட்டது (நடபடிகள் 1:26). இது "ஒப்புவிக்கப்பட்ட பகுதி" என்பதை அர்த்தப்படுத்த உவமை வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஒருவேளை இது சுதந்தரமாகக் கிடைத்த சொத்து அல்லது பொறுப்பு வட்டாரத்தில் ஒப்புவிக்கப்பட்ட பகுதி என்பதைக் குறிப்பிடலாம்.[4] இவ்வார்த்தையானது, உள்ளூர் சபைக்குழுமம் ஒன்றில், மூப்பர்கள் உறுப்பினர்களைப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொருவரும் குழுவிற்குப் பொறுப்பாளிகளாக இருந்தனர் என்று கருத்துத் தெரிவிப்பதாகச்

சிலர் நினைத்துக் கொண்டுள்ளனர். அந்த அர்த்தம் சாத்தியப்பொருத்தம் அற்றதாக உள்ளது, வேறு காரணம் எதுவும் இல்லை என்றாலும்கூட, புதிய ஏற்பாட்டின் வேறு ஏதாவது இடத்தில் ஒரு பயன்பாடு அறியப்படாததாக இருக்கிறது என்ற ஒரு காரணமே இதற்குப் போதுமானது. இந்த முழு உலகத்தையும் கர்த்தருடைய சபையின் கோளம் என்று பேதுரு கருதியிருக்க அதிக வாய்ப்புள்ளது (5:9). மூப்பர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட "பொறுப்புகள்" என்று பேதுரு குறிப்பிட்டது, "பல்வேறு மூப்பர்கள் அல்லது மூப்பர்களின் குழுக்களின் பராமரிப்பின்கீழ் விடப்பட்ட உலகளாவிய மந்தையின் பகுதிகளை" குறிப்பதாக உள்ளது.[5]

மூப்பர்கள், "தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட மந்தையை இறுமாப்பாய் ஆளாமல்" தங்களை **மந்தைக்கு மாதிரிகளாக** நிருபிக்க வேண்டும். நல்ல நடத்துனர்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதற்குரிய பண்புகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னர் அவர்களே அதைத்தங்கள் வாழ்வில் செயல்படுத்துதல் என்பது அவர்களின் உள்ளார்ந்த குணமாக இருக்கிறது. "மாதிரி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை 2:21ல் மாறுபட்டிருந்தாலும், சிந்தை ஒன்றாகவே உள்ளது. எல்லாக் கிறிஸ்தவர்களையும்போல, மூப்பர்களும் கிறிஸ்துவுக்குள் ஒரு மாதிரியைக் கொண்டுள்ளனர், ஆனால் அவர்கள் மூப்பர்களாக இருப்பதால், மாதிரியாயிருக்க விசேஷித்த பொறுப்பைக் கொண்டுள்ளனர். மூப்பர்கள் தங்களின் ஜெபவாழ்வில், வேதவாக்கியங்கள் பற்றிய தங்களின் அறிவில், இழந்து போகப்பட்டுள்ளவர்களுக்காகத் தாங்கள் கொண்டுள்ள அக்கறையில், தங்களின் பொறுமையும் நீடிய பொறுமையுமான வழியில், தங்களின் கண்ணியமிக்க பண்பில், தங்களின் பராமரித்தலுக்கு ஒப்புவிக்கப்பட்டுள்ள மக்களுக்கு "மாதிரியாக" (*tupos*) இருக்க வேண்டும். தெசலோனிக்கேயருக்குப் பவுல், அவர்கள் மீதான தமது உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ள மறுத்தபோது, சபைக்கு மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்ததாகக் கூறினார் (2 தெசலோனிக்கேயர் 3:9). கிறிஸ்தவத் தலைமைத்துவத்திற்கு, "அதிகாரம்" என்பது இயக்கும் வார்த்தையல்ல; "ஊழியம் செய்தல்" என்பதே இயக்கும் வார்த்தையாகும். "அல்ல ..., [ஆனால்] இவ்வாறு ..." என்பதன் அடிப்படையில் சொற்றொடர்களைப் பேதுரு பயன்படுத்தியது இது மூன்றாவது முறையாகும். மூப்பர்கள் (1) கட்டாயமாய் அல்ல ஆனால் மனப்பூர்வமாக ஊழியம் செய்ய வேண்டும், (2) அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல ஆனால் உற்சாக மனதோடு ஊழியம் செய்ய வேண்டும், மற்றும் (3) இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல ஆனால் மாதிரிகளாக ஊழியம் செய்ய வேண்டும்.

**வசனம் 4.** மூப்பர்களுக்குக் கிறிஸ்துவே மாதிரியாக இருந்தார் என்று பேதுரு நினைவூட்டினார். அவர்கள் மேய்ப்பர்களாக இருக்கையில், அவர் [கிறிஸ்து] **பிரதான மேய்ப்பர்** ஆக இருந்தார். பேதுரு இயேசுவை ஏற்கனவே "உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவர்" என்று அழைத்திருந்தார் (2:25). மூப்பர்கள் மந்தையைப் பராமரிக்கின்றனர், ஆனால் இயேசு மேய்ப்பர்களின் மேய்ப்பராக இருக்கிறார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் இயேசுவை, "ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தர்" என்று விவரித்தார் (எபிரெயர் 13:20). இயேசு, தம்மைப் பின்பற்றுபவர்களை வழிநடத்துதல், மேய்த்தல் மற்றும் போஷித்தல் என்ற தமது

பொறுப்பை உண்மையுடன் நிறைவேற்றுகையில், கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றும்படி மூப்பர்களிடம் பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டார்.

ஒரு கிறிஸ்தவர் எவ்விதமான வரங்களைக் கொண்டிருந்தாலும், அவருக்குக் கர்த்தர் எந்த வாய்ப்புகளைத் திறந்தளித்தாலும், அவர் தமது ஆசீர்வாதங்களைத் தாம் பயன்படுத்தும் வகை குறித்துப் பொறுப்பாளியாக இருக்கிறார். இயேசு, **"எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்"** என்று கூறினார் (லூக்கா 12:48). மூப்பர்களுக்குத் தேவன் மாபெரும் ஆசீர்வாதங்களையும் மாபெரும் பொறுப்புக்களையும் கொடுக்கிறார். மூப்பர்கள் தங்கள் கடமைகளை உண்மையுடன் தாங்கள் செய்யும்போது, தங்களுக்கு "பிரதான மேய்ப்பர்" வெகுமதி அளிப்பார் என்பதை நினைவூட்டப்படுகின்றனர், அவரிடத்தில் இருந்து அவர்கள் **மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவார்கள்.**

புதிய ஏற்பாட்டில் இரண்டு வார்த்தைகள் "கிரீடம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மிகவும் பொதுவானதாக உள்ளது *stephanos* என்பதாகும், இது "வெற்றியாளரின் தலையணி" என்று அர்த்தப்படுகிறது. கிரேக்க மொழிபேசும் எல்லா நகரங்களில் ஏறக்குறைய எல்லா நகரங்களும் தங்கள் சொந்த விளையாட்டு வீரர்கள் அயலக நகரங்களின் வீரர்களுக்கு எதிராக போட்டியிடும் விளையாட்டுகளில் உதவிசெய்தன. இத்துடன் கூடுதலாக, எல்லா கிரேக்கர்களுக்குமான "Pan-Hellenic" என்று அவர்கள் அழைத்த விளையாட்டு நடைபெற்றன. இந்த விளையாட்டுகள் நடந்த பழைமையான இடம் ஒலிம்பியா. அங்கு இரண்டாவது பரிசு என்று எதுவும் இருக்கவில்லை. விளையாட்டு நடக்கும் இடத்தில் விளையும் பாரம்பரியமான பசுஞ்செடிகொடிகளினால் செய்யப்பட்ட தலையணியை வெற்றியாளர் பெற்றார். கிரீடம் என்று மொழிபெயர்க்கப்பட்ட இரண்டாவது வார்த்தை "crown" என்பதாகும், இது வெளிப்படுத்தின விசேஷத்தில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது *diadēma* என்பதாகும். இவ்வார்த்தை "ஆட்சியாளரின் கிரீடம்" என்றே அதிகம் ஏற்புடைய வகையில் அர்த்தமாகிறது. இது பொருள் வளம் மற்றும் அதிகாரம் ஆகியவற்றைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. இவ்விரு வார்த்தைகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் எப்போதுமே நேர்த்தியாக வரையப்படுவதில்லை. இவ்வாறாக வெளிப்படுத்தின விசேஷம் 14:14ல் இயேசு பொன்னால் ஆன கிரீடத்தை *(stephanos)* அணிந்துள்ளார், ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 19:12ல் அவர் அநேக கிரீடங்களை *(diadēma)* அணிந்துள்ளார்.

இயேசுவுக்கு சூட்டப்பட்ட முள்கிரீடம் *stephanos* என்பதாக இருந்தது (மத்தேயு 27:29). யூதப்போர்ச்சேவகர்கள் அவருக்கு முன்னால் வணங்கி அவரை "யூதரின் அரசர்" என்று அறிவித்துக் கேலி செய்தனர். அந்த சந்தர்ப்பப்பொருளில் "கிரீடம்" என்பது ஆட்சிசெய்பவரின் கிரீடம் என்று புரிந்துகொள்ளப்பட்டது என்பது தெளிவு. தக்க வகையில் பேசுவது என்றால், ஆட்சியாளரின் கிரீடம் *diadema* என்பதாகும், ஆனால் சில சந்தர்ப்பப்பொருளில் வார்த்தைகள் எவ்வாறு ஒன்றுக்குப்பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதைக் காணுதல் சிரமமானதல்ல. விசுவாசிகளுக்குப் பரலோகத்தின் வெகுமதி என்பது பொருளாக இருக்கும்போது, "கிரீடம்" என்ற வார்த்தையின் அர்த்தம் வெறும் கல்விசார் ஆர்வமாக மாத்திரம் இருப்பதில்லை. கிறிஸ்தவர்கள்

ஆவலுடன் நம்பியிருக்கும் வெகுமதியானது, கிறிஸ்தவ வாழ்வின் மதிப்புகளையும் உயர்கொள்கைகளையும் பற்றிப் பெரிதும் கூறும் அளவுக்கு மாபெரும் தன்மை கொண்டுள்ளது. இவ்வார்த்தை, விளையாட்டுகளில் தரப்படும் "தலையணி" அல்லது ஒரு அரசர் அணியும் "கிரீடம்" என்ற இரண்டில் எதை அர்த்தப்படுத்தினாலும், அது வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. அது முதல் அர்த்தம் கொண்டிருந்தால், கிறிஸ்தவர்களின் "கிரீடம்" வெற்றியை அடையாளப்படுத்துகிறது. கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசி, பாவம் மரணம் ஆகியவற்றின் மீது வெற்றி சிறக்கிறார். இவ்வார்த்தை "மணிமகுடம்," அதாவது ஆட்சி செய்பவரின் கிரீடம் என்ற அர்த்தம் கொண்டிருந்தால், பரலோக வட்டாரங்களில் ஐசுவரியம் மற்றும் வல்லமை ஆகியவற்றை மகிழ்வுடன் அனுபவித்தலே கிறிஸ்தவர்களின் நோக்கமாயிருக்கிறது என்று கருத்துத் தெரிவிக்கிறது.

பேதுரு, "பிரதான மேய்ப்பர் மகிமையுள்ள வாடாத கிரீடத்தை" கொடுப்பார் என்று கூறியது கவனிக்கத் தக்கதாக உள்ளது. அரசாளுபவரின் மணிமகுடம் வாடும் என்று எவரும் எதிர்பார்க்க மாட்டார்கள். அது அழுக்காகலாம், ஆனால் அது வாடிப்போவதில்லை. இதற்கு மறுபுறம், பசுங்கொடிகளால் செய்யப்பட்ட தலையணி விரைவில் வாடிப்போகும், பேதுருவைப் போன்றே பவுலும், பரலோகத்தின் வெகுமதியைப் பற்றி அழிவில்லாத கிரீடம் என்று குறிப்பிட்டுப் பேசினார் (1 கொரிந்தியர் 9:25). பசுங்கொடியானது எளிதில் அழியக்கூடியது, அது விரைவில் அழுகிப்போகக் கூடியது. பேதுரு அல்லது பவுல், விசுவாசிகளுக்குப் பரலோகத்தின் வெகுமதி என்ற வகையில் கிரீடத்தைப் பற்றிப் பேசியபோது, அவர்கள் இருவருமே, ஆளுகை பற்றியதல்ல ஆனால் வெற்றியைப் பற்றியதான சிந்தனையைத் தரவிரும்பினர். இந்த உலகத்தில் மற்றவர்கள் மீது பிரபுத்துவ அதிகாரம் செலுத்துதலைக் கிறிஸ்தவர்கள் குறிக்கோளாகக் கொண்டிருக்கவில்லை என்றால், வரவிருக்கும் யுகத்தில் அவர்கள் பிரபுக்களாக இருக்க விரும்பவேண்டியது ஏன்? கிரீடத்தின் கருத்து செல்வ வளம் மற்றும் வல்லமை என்றிருக்கையில், அது கிறிஸ்தவரின் சிந்தனையில் பின்னிப்பிணைந்துள்ளது. விசுவாசிகள் தங்கள் பாடல்களிலும் தங்கள் ஜெபங்களிலும் அதைப் பிரதிபலிக்கின்றனர், ஆனால் அது தவறான உயர்நோக்கம் ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பரலோக வட்டாரம் எதைப்போன்று இருந்தாலும், சமாதானத்தின் பிரபுவினால் தரப்படும் வெகுமதியானது "ஒரு கட்டிடம், ஒரு உடை மற்றும் ஒரு கிரீடம்" ஆகியவற்றினால் அடையாளப்படுத்தப்படுதல் மிகவும் அரிதானது. அது இளைப்பாறுதல், வெற்றி மற்றும் ஊழியம் செய்தல் ஆகியவற்றினால் அடையாளப்படுத்தப்படுகிறது.

## தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் (5:5-8)

**[5]அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். [6]ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். [7]அவர்**

**உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். [8]தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.**

*மூப்பர்கள் [சபையை] வழிநடத்துவதற்கு, பின்பற்ற மனவிருப்பம் கொண்ட மக்கள் இருக்க வேண்டும். சபையானது ஒரே சிந்தைகொண்ட மக்களைக் கொண்ட இராஜ்யமாக உள்ளது, அவர்கள் தேவனுக்கும் அவர் தங்களுக்கு முன்வைத்துள்ள உயர்கொள்கைகளுக்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாக இருக்கின்றனர். பலவந்தம் பண்ணுதலோ அல்லது கட்டாயப்படுத்துதலோ அங்கு இருப்பதில்லை, மேட்டிமையும் முரட்டுத்தனமும் தேவனுக்கு எதிரான சிந்தையின் கட்டமைப்பிற்கு அடிப்படையாக உள்ளன என்பது உண்மையானால்,[6] தாழ்மையும் கீழ்ப்படிதலும் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட சிந்தைக்கு முன்தேவைகளாக உள்ளன என்பது தொடருகிறது. கீழ்ப்படிதல் என்பது எரிச்சல் மூட்டுவதாக இருக்கலாம், கீழ்ப்படிவதற்கு ஒருவர், பிறருக்குத் தமது முடிவை பணிவிணக்கத்துடன் காண்பிக்க, அவ்வப்போதாகிலும் மனவிருப்பம் கொண்டிருக்க வேண்டும். அரசுகளுக்குக் கீழ்ப்படிதல் (2:13-17), எஜமானர்களுக்கு அடிமைகள் கீழ்ப்படிதல் (2:18-20) ம ற்றும் கணவர்களுக்கு மனைவிகள் கீழ்ப்படிதல் (3:1-7) ஆகியவற்றைப் பற்றிப் பேதுரு ஏற்கனவே எழுதி இருந்தார். இங்கு அவர், மூப்பர்களுக்கு இளைஞர்கள் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார். கிறிஸ்தவர்களுக்கு கீழ்ப்படிதல் தரப்பட்டுள்ளது, அது கட்டாயப்படுத்தப்படுவதில்லை. அது தேவனுக்கு முன்பாகத் தாழ்மையுடன் நிற்பதன் இயல்பான விளைவாக உள்ளது. அது, வாழ்வு மாயையானது, பிறப்பு, இறப்பு அல்லது இவற்றிற்கு இடையில் உள்ள பல விஷயங்கள் ஆகியவற்றின்மீது நாம் கட்டுப்பாடு எதையும் செலுத்த இயலாது என்பதை அங்கீகரித்தலாக உள்ளது. இது, தேவன் கட்டுப்படுத்துகிறார் என்பதை அறிக்கையிடுதலாக உள்ளது.*

**வசனம் 5.** "மூப்பர்கள்" என்பது சபையின் நடத்துனர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சொற்றொடர்களில் ஒன்றாக இருப்பதால், கீழ்ப்படிதல் பற்றிய தமது அறிவுறுத்தலைப் பேதுரு **இளைஞர்களை** நோக்கித் திருப்பியது இயல்பானதாகவே உள்ளது. சபையின் நடத்துவத்துவம் ஆண்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது இங்கு மறைவான கருத்தாக உள்ளது. முதிர் வயது உள்ள ஆண்கள் நடத்தவேண்டும் என்பதால், சபை ஆளுகை பற்றிய விஷயங்களில் கீழ்ப்படிதலுக்கான புத்திகூறுதல் இளைஞர்களை நோக்கித் திருப்பப்பட்டுள்ளது. நவீன மேற்கத்திய கலாச்சாரத்தில் பெண்கள், குடிமை, பொருளாதார மற்றும் சபை வாழ்வில் அதிகம் செயல்துடிப்பு கொண்டுள்ளனர், கீழ்ப்படிதலுக்கான அதே அழைப்பு அவர்களுக்கும் நடைமுறைப்படுகிறது.

பேதுரு "இளைய மனிதர்களுக்கு" ["young men"] (*neos*) அல்ல, ஆனால் "மற்றவர்களைக் காட்டிலும் இளைய மனிதர்களுக்கு" ["younger men"] (*neōteros*) இதை உரைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது

ஆகும், ஒருவேலை அப்போஸ்தலர், தமது சொற்றொடர்கள் முற்றிலும் இணையானவையாக இருக்கவில்லை என்பதை உணர்ந்தறிந்தவராக, ஒப்புமைப் பெயர் உரிச்சொல்லைப் பயன்படுத்தியிருக்கலாம். "Younger" என்பது ஆண்டுக்கணக்கீட்டின்படி வயதைக் குறிப்பதாக உள்ளது, ஆனால் *"மூப்பர்"* என்பது சபையில் உள்ள ஒரு பணிநிலையைக் குறிப்பதாக உள்ளது.[7] **மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள்** என்பது, வம்சவழி கருத்தில் வயது முதி ர்ந்தவர்களை அல்ல, ஆனால் சபையின் பணிநிலையைக் குறிப்பிடுகிறது என்பதில் சிறிதளவே சந்தேகம் இருக்க முடியும். "மூப்பர்கள்" அல்லாத கிறிஸ்தவர்கள், தங்களின் நடத்துனர்களுடைய முடிவிற்கு இசைவிணக்கம் காண்பிக்கும்படி, அவர்கள் ஏற்படுத்தும் முடிவுகளில் அவர்களை ஆதரிக்கும்படி, அவர்களின் ஊழியத்தின் நிமித்தம் அவர்களை மதிக்கும்படி மற்றும் அவர்களின் சார்பாக தேவனிடம் ஜெபங்களை ஏறெடுக்கும்படி பேதுரு அழைத்தார்.

கீழ்ப்படிதல் என்பது வற்புறுத்தப்படுவதாக உள்ளது என்று கருதுபவர்களுக்கு அல்லது தங்கள் கருத்துக்கள், தங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மூப்பர்களின் கருத்துக்களை விட மேலானவை என்று கருதுபவர்களுக்கு, தாழ்மை என்பதே நெறிமுறையாக இருந்தது என்று பேதுரு நினைவூட்டினார். நீங்களெல்லாரும் **ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்.** எல்லா விசுவாசிகளும் தங்கள் உறவுமுறையில் பண்புப்படுத்த வேண்டிய சிந்தையின் சட்டகத்தினுடைய விரிவான குடையின்கீழ் மூப்பர்களுக்குக் கீழ்ப்படிதல் என்பதை அப்போஸ்தலர் வைத்தார். "அணிந்துகொள்ளுங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*enkomboomai* என்ற) வார்த்தை, மிகவும் அரிதானதாக, புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுவதாக உள்ளது. குறிப்பாக இது, ஒரு நபரைச் சுற்றிலும் பிணைத்து அணியச்செய்யும் மேலங்கி அல்லது உள்ளாடையைப் பாதுகாக்க வெளியே அணியப்படும் உடை என்பதைக் குறிக்கிறது. இவ்வார்த்தை, இயேசு தாழ்மையைப் போதித்ததோடு அதைச் செயல்விளக்கமும் செய்து காண்பித்தார் என்பதற்கு ஒரு நினைவூட்டுதலாக உள்ளது. அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தின இரவில், அவரும் சீஷர்களும் ஒரு மேல் வீட்டில் கூடியிருந்தபோது, இயேசு தமது மேல் அங்கியைக் களைந்து புறம்பே வைத்துவிட்டு, தண்ணீர்ப் பாத்திரம் ஒன்றை எடுத்துக்கொண்டு, பன்னிருவரின் பாதங்களைக் கழுவினார். "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" என்று கூறி அவர் இந்த நிகழ்வை முடித்து வைத்தார் (யோவான் 13:14, 15). "நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்" என்ற பேதுருவின் புத்திமதிக்கு இயேசுவின் வாழ்வே விளக்கமாக உள்ளது.

பேதுரு இந்த நிருபத்தில் மற்ற இடங்களில் செய்திருந்தது போன்ற (1:24, 25; 2:6-8; 3:10-12), இங்கும் வேதவசனத்தில் இருந்து ஒரு மேற்கோளுடன் தமது புத்திமதியை ஆதரித்து மறுவலியூட்டினார். இது நீதி மொழிகள் 3:34ல் இருந்து வருகிறது: **பெருமையுள்ளவர்களுக்குத் தேவன்**

**எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்,** இதே வசனப்பகுதியை யாக்கோபும் சுட்டிக் காண்பித்தார் (யாக்கோபு 4:6), இது பேதுருவின் முதல் நிருபத்திற்கும் கர்த்தருடைய சகோதரரின் நிருபத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றிய ஆர்வமிக்க பல விஷயங்களில் ஒன்றாக உள்ளது. நீதிமொழிகளிலிருந்து வரும் மேற்கோளானது "பெருமை" என்பது "தாழ்மை" க்கு எதிரிடையானது என்பதை சுட்டிக்காட்டுகிறது. இருப்பினும், சமகாலத்திய பயன்பாட்டில், "பெருமை" என்பது நன்கு செய்யப்பட்ட ஒரு வேலையில் திருப்தியை அல்லது சுயமதிப்பு பற்றிய கருத்தைச் சிலவேளைகளில் குறிக்கிறது. "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" என்ற மொழிபெயர்ப்பு, பேதுருவின் கட்டளையினுடைய கருத்தறிவைப் பெற்றுத் தருகிறது. "தாழ்மையுள்ளவர்கள்" என்பது மூப்பர்களுக்கு "கீழ்ப்படிந்திருக்க" மனதுள்ளவர்களைக் குறிக்கிறது, ஆனால் இந்த மேற்கோளானது கீழ்ப்படிதலை இன்னொரு மட்டத்திற்கு எடுத்துச் செல்கிறது. இது தேவனுடைய மக்கள் மற்றவர்களின் தேவைகளைக் கண்ணோக்கத் தங்கள் சிந்தைகளை எடுத்துச் செல்லுதலைப் பண்புப்படுத்துகிறது. "ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்" (ரோமர் 12:16).

**வசனம் 6.** பேதுரு இங்கு குறிப்பிட்டது போன்று, சபைகளில் பின்வருமாறு கூறுதல் போன்ற பழமொழி ஒன்று இருந்திருக்கும்: **ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.** இந்த வார்த்தைகள் பழமொழி சார்ந்தவைகளாக இருந்தன என்றால், அது யாக்கோபு இதே சொற்றொடரைப் பயன்படுத்தியது ஏன் என்பதை விளக்கப்படுத்துவதாக இருக்கும் (யாக்கோபு 4:10). ஒருவர் தம்மையே தாழ்த்த விரும்புதல் என்பது அவர் கீழ்ப்படிதல் உள்ளவராக இருக்க விரும்புகிறார் என்பதுடன் தொடர்புடையதாக இருப்பதில்லை. எந்த மட்டத்திலும் (குடிமை அரசு, இல்லம் அல்லது சபை) கீழ்ப்படிதல் என்பது ஒருவர் தேவனுக்குக் கீழ்ப்படிதலுடன் இருக்க மனவிருப்பம் கொண்டுள்ளாரா என்பதைப் பொறுத்ததாக உள்ளது. தேவனுக்கு எதிராக மனிதரின் கலகத்தினுடைய வேர் என்பது "தேவனுடைய பலத்த கைக்குள்" அடங்கி இருக்க மனவிருப்பம் இல்லாமை என்பதாகவே இருந்துள்ளது என்று கூறுவது தவறல்ல. இவ்வசனப்பகுதி, தேவன் தமது மக்களைச் செயல்துடிப்பற்ற, விருப்பமற்ற வகையில் கீழ்ப்படிதல் என்பதைக் காட்டிலும் அதிகமானதற்கு அழைக்கிறார் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது என்று ஆலன் ஸ்டிப்ஸ் அவர்கள் உற்றுநோக்கியது சரியே. தேவன் தமது மக்களிடம், செயல்துடிப்பான பங்கேற்பையும், அவர்களின் மனப்பூர்வமான நம்பிக்கையையும், அவர்களின் விசுவாசத்தையும் விரும்புகிறார்.[8] ஒருவர் தேவனுக்கு முன்பாகத் தம்மை உயர்த்தி அவரது நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ளுதல் என்பதே இதற்கு மாற்றானதாக உள்ளது.

முரண்பாடு போலத் தோன்றினாலும், மேன்மையடைதலுக்கான வழி கீழ்ப்படிதல் மூலமானதே. மனிதகுலத்தின் பொதுவான அனுபவம், பின்வரும் கொள்கைக்குச் சாட்சியைச் சுமக்கிறது: "தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன்

*அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" (யோவான் 12:25).* தமது சொந்த படைப்புயிர் சந்தோஷங்களுக்காகத் தமது ஆற்றல்களை அர்ப்பணித்துள்ள ஒருவர், ஜீவன் வழங்கக் கூடிய நன்மை யாவற்றையும் இழந்து போகிறார். சுய மேன்மைப்படுத்திக் கொள்ளுதல் ஒருக்காலும் வேலைக்கு ஆவதில்லை. தாவீது, உறங்கும் தமது எதிரியின் மேலாக நின்றுகொண்டு, செயல்விளைவில் "தேவன் இவரைத் தேர்ந்துகொண்டுள்ளார். இவரை உயர்த்துவதோ அல்லது தாழ்த்துவதோ தேவனுடைய செயலாக உள்ளது. கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டவருக்கு எதிராக நான் எனது கையை உயர்த்த மாட்டேன்"என்று கூறியபோது இருந்ததைக் காட்டிலும் அதிகம் தேவபக்தி உடையவராக வேறு எந்த வேளையிலும் இருக்கவில்லை (காண்க 1 சாமுவேல் 26:9-11). திருமண விருந்திற்குச் சென்று மிகவும் உயர்ந்த இடத்தைக் கண்டறியத் தேடிய ஒரு மனிதர் பற்றிய உவமையை இயேசு கூறினார். பேதுருவின் வார்த்தைகள் இயேசு தமது உவமையின் முடிவில் பயன்படுத்திய வார்த்தைகளைப் போன்றே உள்ளன: *"தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக்கா 14:11).*

**வசனம் 7.** சுயமேன்மைக்கு எதிரான கருத்தானது, ஒருவர் தன்மையே தாழ்த்திச் செல்லும் வழியாக உள்ளது, இது (ஒருவர் தமது) **கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடு**தலாக உள்ளது. KJV வேதாகமத்தின் தரவமைப்பான "casting all your care upon him" என்பது சற்றே தவறாக வழிநடத்துவதாக உள்ளது. நவீன ஆங்கிலத்தில் "care" என்பது ஒருவர் மற்றவர் மீது காண்பிக்கும் அக்கறையாக உள்ளது. அக்கறைப்படுதல் நல்லதுதான். பேதுரு பயன்படுத்திய (*merimna*) **"கவலை"** என்ற வார்த்தை ஒரு நல்ல விஷயமல்ல என்பதை அர்த்தப்படுத்துகிறது. வாழ்வில் நிச்சயம ற்ற தன்மைகளினால் அழுத்திக் கீழ்த்தள்ளப்பட்டு, ஏக்கமும் கவலையும் கொண்டிருக்கச் சாய்தல் என்பது மனித சூழ்நிலையின் உள்ளாகவே கட்டப்பட்டுள்ளது. இது "மனிதரின் அன்றாட வாழ்வில் அவர்மீது வீழ்கின்ற ஏழ்மை, பசி மற்றும் பிற தொந்தரவுகள் ஆகியவற்றிற்கு அவரது இயல்பான பதில்செயலாக உள்ளது. மனிதர் தம்மீது சுமத்தப்படுகிற சுமைகளினால் அழுத்தப்பட்டு, தாம் ஆற்றலற்று முன்நிற்கும் வலிய விதிக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டுள்ளதாகக் கற்பனை செய்கிறார்."[9] பேதுரு தமது வாசகர்களுக்கு, அவர்கள் விதிக்கோ அல்லது தற்செயலுக்கோ ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தினார். தேவன் இந்த உலகத்தின் மீது கட்டுப்பாடு செலுத்துகிறார்; அவர்மீது நாம் நமது இடர்பாடுகளை வைத்து விடலாம்.

பேதுரு தமது வார்த்தைகளுக்கு நேரடியாக மேற்கோள் காண்பிக்கவில்லை என்றாலும், சங்கீதம் 55:22ஐச் சார்ந்திருப்பதாகக் காணப்பட்டார்: "கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்." வற்புறுத்தும் புத்திமதிகளைப் பல சங்கீதங்கள் அளிக்கின்றன, இவை பேதுருவின் இந்த அழைப்பில் மறுவலியூட்டப்படுகின்றன, உதாரணமாக "தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" (சங்கீதம் 145:18). வார்த்தை அமைப்பு நெருக்கமாக இல்லாதிருக்கையில், மத்தேயு 6:25-34 ன்

கருத்தும் இதைப்போன்றே உள்ளது: “ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?” (மத்தேயு 6:25). பேதுரு மற்றும் இயேசு ஆகிய இருவருக்குமே, “கவலை என்பது, தேவன் நமது நலத்தைக் காணக்கூடாதவர் அல்லது அதைச் சாய்க்கக் கூடாதவர் என்ற உள்ளுணர்வை ஆழமாய்ப் பதிக்கக் கூடிய விஷயமாக இருந்தது.”[10]

கர்த்தருடைய மக்கள் தங்கள் கவலைகளைத் தைரியமாய் அவர்மேல் வைக்கலாம் என்பது ஏன் என்பதற்கு நல்ல காரணம் ஒன்றுள்ளது. அப்போஸ்தலர், **அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால்** என்று கூறியதன் மூலம் தமது வாசகர்களுக்கு மறு உறுதிப்பாடு அளித்தார். பேதுருவின் நிருபத்தினுடைய முதல் வாசகர்கள் அனுபவித்தது போன்று, கிறிஸ்துவின் நாமத்தை அணிந்து கொண்டதற்காக, துன்புறுத்தப்படுதலை ஒருவர் எதிர்கொண்டாலும் அல்லது நிதிநிலைப் பாதுகாப்பு இன்மை அல்லது வியாதி மற்றும் மரணம் ஆகியவற்றை எதிர்கொண்டாலும்- கிறிஸ்தவர் மீது எவ்விதமான கவலை வீழ்ந்தாலும் அவர், தம்மைத் தேவன் பராமரிக்கிறார் என்ற தைரியத்தில் அவற்றைத் தாங்க முடியும். இயேசு கிறிஸ்து மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட தேவன் தமது மக்களைக்குச் சொந்தமான பிதாவாக இருக்கிறார். அவர் வானத்தையும் பூமியையும் படைத்துவிட்டுப் பின்பு அதில் இருந்து பின்வாங்கிப்போன ஆர்வமற்ற ஆர்வலராக இருப்பதில்லை. அவர் தமது மக்களின் வாழ்வில் ஜீவிக்கிறார். அவரது அருளிரக்கமுள்ள பராமரிப்பு எப்போதுமே செயல்படுகிறது. “தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்” (1 யோவான் 4:16). சாலொமோனின் ஞானம் என்று அழைக்கப்படுகிற தள்ளுபடி ஆகமங்களில் ஒரு புத்தகம் இதே சிந்தைனையை அளிக்கிறது: “எல்லா மக்களையும் பராமரிக்கும் வேறு எந்த கடவுளும் உனக்கு முன்பாக இல்லை.”[11]

**வசனம் 8.** விசுவாசிகள் தங்கள் பொறுப்புக்களைத் தாங்களே மேற்கொள்ள வேண்டும், மற்றும் அவர்களின் அடைவிடங்கள் அதைச் சார்ந்தே தீவிரமாயுள்ளன என்ற புத்திமதியானது வேதவாக்கியங்களில் பொதுவாக உள்ளது. **தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்** என்று பேதுரு எழுதினார். **“தெளிந்த புத்தி”** (*nēphō*) என்ற வார்த்தை, தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் போன்றே, கிரேக்க மொழியிலும், போதையற்ற நிலையில் இருத்தலையே நேர்ப்பொருளில் அர்த்தப்படுத்துகிறது. இருப்பினும், இது நன்கு சமப்படுத்தப்பட்ட மற்றும் சுயகட்டுப்பாடு கொண்ட நிலையில் இருத்தல் என்ற கருத்திற்கும் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது, எனவே இது தீவிரமான மற்றும் சிந்தனை நிறைந்த வகையில் இருத்தல் என்றாகிறது. “தெளிந்த புத்தி” கொண்டிருத்தல் என்பது, மனச்சோர்வு, இணக்கமற்றநிலை, ஒருக்காலும் புன்முறுவல் பூக்காத நிலை, வாழ்வில் மகிழ்ச்சியே காணாத நிலை ஆகியவற்றைப் போன்று இருப்பதில்லை. மனித வாழ்வு சிலவற்றை அர்த்தப்படுத்துகிறது என்பதையே இது அர்த்தப்படுத்துகிறது. வாழ்வு என்பது தீவிரமாய்ச் சிந்திக்க வேண்டிய விஷயமாக உள்ளதே.

பழங்கால மற்றும் தற்கால உலகில் உள்ள புறதெய்வ வணக்கத்தாரின் கூக்குரல்கள், எந்த மனித வாழ்வும் சிறியதே என்று தொகுக்கும் அளவுக்கு மனித இருப்பைக் குறைத்து மதிப்பிட்டுள்ளன. பலதெய்வ வணக்கம் கொண்ட கிரேக்க - ரோம உலகத்தில் பலர், விதியானது எல்லாரையும் ஆண்டது என்று நினைத்தனர். மரணம் என்பது நிர்மூலமாகுதல் அல்லது நிழலான மறைவு உலத்திற்குக் கடத்தப்படுதல் என்றே அர்த்தப்படுத்திற்று. ஸ்தேயிக்கப் போதகர்கள், வண்டியொன்றின் பின்னால் கட்டப்பட்ட நாய் ஒன்றைப் பற்றிய கதையைக் கூறினர். உரிமையாளர் ஒருவர் தமது வண்டியை பக்கத்து நகருக்கு ஓட்டிச் செல்ல முடிவெடுத்தபோது, நாயானது தான் போவதில்லை என்று முடிவெடுத்தது. அதை வண்டி இழுத்துச் சென்றது, பாறைகளுக்கு எதிராக அது குதித்து மோதிற்று, இரத்தம் பீறிட்டு அடிபட்டு அடைவிடம் சென்று சேர்ந்தது. செயல்விளைவில் ஸ்தோயிக்கர்கள், “பாருங்கள், வண்டியின் பின்னால் சென்றாலும் செல்ல விருப்பம் அற்றிருந்தாலும், நாயானது நியமிக்கப்பட்ட அந்த இடத்திற்குச் சென்றேயாக வேண்டியிருந்தது. அந்த நாயைப்போன்றே, உங்கள் வாழ்வும் விதியானது நியமித்துள்ள இடம் எதுவோ அதில் சென்று முடிந்தேயாக வேண்டும். அங்கு நீங்கள் எவ்வாறு செல்ல விரும்புகிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்கள் பயணம் அமையும். வண்டியின் பின்னே நிதானமாய்ச் செல்லுங்கள். அலைபாயாதீர்கள், அப்போது வாழ்வு மேன்மையாக இருக்கும். உங்கள் சுய விருப்பத் தேர்வுகளைத் தீவிரம ாய் எடுத்துக் கொள்ள வேண்டாம். எதிலும் அதிகமான நம்பிக்கையை வைக்க வேண்டாம் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதோ எதை நம்புகிறீர்கள் என்பதோ முக்கியமானதல்ல” என்றே கூறினார்கள்.

பழங்கால உலகத்தோடு ஒப்பிடுகையில், நவீன காலங்களில் வலியுறுத்தம் மாறுபட்டுள்ளது. இப்போது விதியல்ல ஆனால் தற்செயல் என்பதே ஆளுகை செய்கிறது. மனிதவாழ்வு என்பது பரிணாம செயல்முறையின் உற்பத்தியாக உள்ளது என்ற கருத்தைக் கொண்டவர்களுக்கு அறிவியலே கடவுளாக உள்ளது, வேறு எதுவும் இல்லை. மனிதன் என்பவன் மற்ற ஜீவிகளுக்கு எதிராகத் தனது பெருவிரலைக் கொண்டுள்ளமை மற்றும் தமது மூளையின் சாம்பற்பகுதி யில் அதிகமான வளைவுகளைக் கொண்டுள்ளமை ஆகியவற்றினால் மற்ற உயிரினங்களில் இருந்து மாறுபடுத்தப்படுகிறான். இது ஒரு கரப்பான் பூச்சி கடினமான மேலுறையும் ஆறுகால்களும் கொண்டதால் மாறுபடுத்தப்படுதல் போன்றதாக உள்ளது. இவ்விரண்டுமே மற்ற உயிரிகள் மத்தியில் உள்ள உயிரிகளாக உள்ளன. வாழ்வு என்பது மனிதனைக் காட்டிலும் ஒரு கரப்பான் பூச்சிக்குத் தீவிரமானதாக இல்லை. ஒருவர் மரிக்கிறார், அடுத்த தலைமுறை எழும்பி அவரது இடைத்தைப் பிடிக்கிறது. இதற்கு நேர்மாறாகப் பேதுரு, “தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்” என்று கூறினார். “நீங்கள் தேவனால் படைக்கப்பட்டவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் விசுவாசிப்பது மற்றும் செய்வது என்ன என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது” என்று கூறினார்.

வாழ்வை ஒருவர் தீவிரமானதாக எடுத்துக்கொள்ளுகையில், அவர் “தெளிந்த புத்தி உள்ளவராக” இருக்கையில், **அவர் விழித்திருக்க வேண்டும்** என்பதும் அதைத் தொடர்கிறது. **உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்** என்பதால், விழித்திருத்தல் என்பது அவசியமானதாக

*உள்ளது. "பிசாசானவன்" பற்றிய குறிப்பு 1 பேதுரு நிருபத்தில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுகிறது. "சாத்தான்" என்ற வார்த்தை இந்த நிருபத்தில் காணப்படுவதில்லை. தேவனையும் மனிதனையும் எதிர்த்து நிற்கும் ஒரு தனிப்பட்ட ஜீவியைப் பற்றிப் பேதுரு எச்சரிப்பதாகக் காணப்படுகிறது. "பிசாசானவன்" (diabolos) என்ற வார்த்தை "அவதூறு செய்பவன்" என்று அர்த்தப்படுகிறது. சிலவேளைகளில் இது புதிய ஏற்பாட்டில் பொதுவான அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது (2 தீமோத்தேயு 3:3; தீத்து 2:3). இது Satan என்ற எபிரெய வார்த்தையைப் போன்றே, "எதிராளி" அல்லது "குற்றம் சாட்டுபவன்" என்ற அதே அர்த்தம் கொண்டுள்ளது. 1 பேதுரு நிருபத்தில் பிசாசானவன் எதிராளியாக இருக்கிறான். அவன் மனிதகுலத்திற்குத் துன்பம் வருவதையே நாடுகிறான். அவன் ஆத்துமாக்களைப் பட்சிக்கிறான், அவைகளை நித்திய அழிவிற்கு வழிநடத்துகிறான். பிசாசானவன் இங்கு ஒரு சிங்கத்திற்கு ஒப்பிடப் பட்டுள்ளான் என்பது ஆர்வத்திற்குரியதாக உள்ளது, ஏனெனில் இயேசுவும்கூட, "யூதா கோத்திரத்துச் சிங்கம்" என்றே இருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 5:5).*

*தனிப்பட்ட வகையிலான சோதனை மற்றும் பாவம் ஆகியவற்றில் பிசாசானவனுடைய பங்கைப் புரிந்துகொள்ளுதல் கடினமானதாக உள்ளது. சோதனை என்பது, ஒருவர் தமது சொந்த இச்சைகளினால் இழுக்கப்படுதல் என்று யாக்கோபு கூறினார் (யாக்கோபு 1:14). நியாயப்பிரமாணத்தை மீறுதலே பாவம் என்று யோவான் கூறினார் (1 யோவான் 3:4), இது ஒருவர் செய்வதைத் தேர்ந்து கொள்கிறார் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது.*

*வேதாகமத்தில் பாவம் செய்யும்படி சோதித்து மக்களை இழுப்பவர்களாகச் சாத்தானும் பிசாசானவனும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதைப்போன்ற வசனப்பகுதிகள் அதைச் செய்வதைக் கடினமாக்குகின்றன. பிசாசானவன் என்பது, பாபிலோனியக் காலகட்டத்தின்போது யூதர்கள் மத்தியில் எழும்பிய மாயாவாதக் கற்பனைக் கருத்து என்று சிலர் அதை விலக்கிப் போட விரும்புகின்றனர். அதுவும்கூட தனது சிரமங்களைக் கொண்டுள்ளது. பிசாசானவனைப் பற்றிக் கிறிஸ்தவர் கூறவிரும்புவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவன் தனிப்பட்ட ஜீவியமாக இருப்பதாகத் தோன்றுகிறான், அவன் தேவனால் படைக்கப்பட்ட மனிதனைச் சோதித்து, அந்த மனிதன் தேவனையும் அவரது செய்கையையும் மறுதலிக்கச் செய்யவும் தேவனைக் கனவீனப்படுத்தவும் மனிதனை வளைக்கிறான். இது நிச்சயமாக உள்ளது: பிசாசானவன் பொல்லாத கடவுள் அல்ல, அவன் படைத்தவருடன் சமானமாகவோ அல்லது சம நித்தியமானவனாகவோ இருப்பதில்லை. அவனது வல்லமை தேவனுக்குக் கீழ்ப்பட்டதாக உள்ளது. சந்திப்பின் நாளிலே, கர்த்தர் திரும்ப வரும்போது அவன் தோற்கடிக்கப்படுவான்.*

## உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே *(5:9-11)*

**[9]விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள்**

***நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. [10]கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக; [11]அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென்.***

*அப்போஸ்தலர் தமது நிருபத்தின் முடிவுக் குறிப்புரைக்குத் திரும்பினார். அவரது வாசகர்களின் பாடுகள் எப்போதும் அவருக்கு முன்பாக இருந்தன, எனவே அப்போஸ்தலர் ஊக்கமூட்டும் வார்த்தைகளுடன் இந்த நிருபத்தை முடித்தல் என்பது ஏற்புடையதாக இருந்தது. ஏதோ ஒருவகையில், அவர்களின் பாடுகள் சாத்தானால் ஏவப்பட்டிருந்தன. அவர்கள் அவனை எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது, மற்றும் தாங்கள் அனுபவித்த பாடுகள் ஏராளமான தங்கள் சகோதரர்களால் பகிர்ந்துகொள்ளப்பட்டன என்ற அறிவில் அவர்கள் ஆறுதல் கண்டடைய வேண்டியதிருந்தது. மற்றும் அவர்கள், தேவன் இந்த யுகத்தை முடிவுக்குக் கொண்டுவரும்போது தங்களுக்குக் காத்திருக்கும் மகிமை பற்றி நினைவூட்டப்பட்டனர்.*

***வசனம் 9.*** *யாக்கோபு மற்றும் பேதுரு ஆகிய இருவருமே, பிசாசானவன் எதிர்த்து நிற்கப்பட வேண்டியவன் என்று எழுதினர், ஆனால் யாக்கோபு இந்த எதிர்ப்பை தேவனுக்குக் கீழ்ப்படிதலுடன் நேரடியாகத் தொடர்பு படுத்தினார் (யாக்கோபு 4:7).* ***விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்*** *என்று பேதுரு கூறியபோது, அவரது சிந்தனை வெகு தொலைவில் இல்லை. விசுவாசி ஒருவர், விசுவாசத்தின் சமூகத்துடன் சேர்ந்து தமது விசுவாசத்தை உறுதிப்படுத்தும்போது, அவர் பிசாசானவனை எதிர்த்து நிற்கிறார் (1:17-19). "எதிர்த்து நிற்றல்" என்பது "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது" (1:7) விசுவாசம் நிறைந்தவர்களாகக் காணப்படுதல் என்று அர்த்தப்படுகிறது. இது உங்களைப் பற்றிப் பொல்லாதவற்றைப் பேசுபவர்களைக் குறித்துப் பொல்லாதவற்றைப் பேச மறுத்தல் என்று அர்த்தப்படுகிறது (2:23; 3:9). இது ஒருவர் தமது வாழ்வை உயர் ஒழுக்கத் தளத்திற்கு ஒப்புக்கொடுக்கத் தொடருதல் என்று அர்த்தப்படுகிறது (4:3, 4). கிறிஸ்துவை அறிக்கையிடுதலுக்கு முயற்சி, எதிர்த்து நிற்றல் மற்றும் உறுதிப்பாடு ஆகியவை தேவைப்படுகின்றன. கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கையிட்டு, அவரது நாமத்தில் முழுக்காட்டுப் பெறுதலுடன் தொடங்கும் கிறிஸ்தவ வாழ்வு நண்பர்களிடம் இருந்து ஆதரவையும் உணர்வுப்பூர்வம ான மன எழுச்சியையும் பெறுகிறது. அதன்பின் உண்மைநிலை அமைகிறது. விதைப்பவன் உவமையில் கூறப்பட்டுள்ளபடி, சிலவேளைகளில் மண்ணின் ஆழம் சிறிதளவே இருக்கலாம். பலர் உலகப்பிரகாரமான வாழ்விற்குத் தி ரும்பிச் சென்றுள்ளனர். பிசாசானவனை முடிவு வரையிலும் எதிர்த்து நிற்க, விசுவாசத்தில் உறுதியாயிருத்தல், ஜெபம், சகிப்புத்தன்மை மற்றும் சகவிசுவாசிகளிடம் ஆதரவு ஆகியவை தேவைப்படுகின்றன.*

*இந்த நிருபத்தில் நான்காவது முறையாக இவ்விடத்தில் பேதுரு, தமது வாசகர்களின் பாடுகளைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிட்டார் (1:6-9; 3:13-17; 4:12-19; 5:9, 10). ஒருவர் பாடு அனுபவிக்கும்போது, அந்தக் கடினமான விஷயத்தில் பங்கேற்கும் மற்றவர்களும் இருக்கின்றனர் என்று*

*அறிதல் சற்றே ஆறுதலைத் தருவதாயிருக்கிறது. அப்போஸ்தலரின் வாசகர்கள்* **உலகத்திலுள்ள [தங்கள்] சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி [வந்தது]** *என்பதை அறிய வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார். வரலாற்று ரீதியான கேள்விகளின்மீது தாங்குதலைக் கொண்டுள்ள அதிகம் குறிப்பிடத்தக்க விஷயங்களுக்கு இந்த நிருபத்தில் இதைக்காட்டிலும் அதிக விசேஷித்த வசனம் வேறு எதுவும் இல்லை என்றே கூறலாம். கர்த்தருடைய மரணத்திற்குப் பின்பு சுமார் முப்பத்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிற்பாடாக, விசுவாசிகளின் உலகளாவிய சகோதரத்துவம் பற்றிப் பேதுரு எழுத முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது.*

*சிதறடிக்கப்பட்ட நிலையில் கிறிஸ்தவர்கள், ஒருவர் மற்றவரைக் காத்துக்கொண்டும் ஒருவர் மற்றவரை ஆதரித்தும் இருந்தனர். அவர்கள் ஒரு ஐக்கியமாக. சகோதரத்துவமாக, பரப்பெல்லையில் உலகளாவியவர்களாக இருந்தனர். ஜான் ஸ்டாட் அவர்கள், "வேதாகமத்தின் அதிகாரத்துவம் பெற்ற கிறிஸ்தவம், பாதுகாப்பான, மனநிறைவான, வசதியான, தப்பிக்கொள்ளக்கூடிய சிறு மார்க்கமாக இருப்பதில்லை .... அது வெடித்துச் சிதறும் இயல்புள்ள, நமது சுய மையத்தன்மையில் இருந்து நம்மை வெளியே இழுத்துப்போடும் மையவிலக்குவிசையாகவும், தேவனுடைய உலகத்தில் சாட்சியளிக்கவும் ஊழியம் செய்யவும் நம்மை உந்தித்தள்ளுவதாகவும் உள்ளது" என்று சரியாகவே விளக்கம் அளித்தார்.*[12]

*மற்ற விஷயங்களுக்கு மத்தியில் அப்போஸ்தலர், உலகத்தில் வளர்ந்து அதை வென்றுகொண்டிருந்த ஒரு இயக்கத்தின் வெட்டுமுனையின்மீது தமது வாசகர்கள் இருந்தனர் என்பதை அவர்களுக்கு நினைவூட்ட விரும்பினார், கொலோசெயருக்குப் பவுல், அவர்கள் விசுவாசித்திருந்த சுவிசேஷம் அவர்கள் மத்தியில் செயல்பட்டது போன்றே உலகம் முழுவதிலும் "பரம்பி பலன் தருகிறது" என்று எழுதினார் (கொலோசெயர் 1:6; காண்க ரோமர் 10:18). பவுல், "எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும்" சுவிசேஷத்தைப் பிரசங்கித்தது மட்டுமின்றி (ரோமர் 15:19), அவர் ஸ்பானியா தேசத்திற்குச் செல்ல வேண்டும் என்றும் எண்ணியிருந்தார் (ரோமர் 15:24). பவுலின் ஊழியப் பணியைப் பற்றி நாம், அவரது நிருபங்களில் இருந்தும் நடபடிகள் புத்தகத்தில் இருந்தும் சிறிதளவு அறிகிறோம். பேதுருவின் ஊழியம் பற்றி நாம் இன்னும் குறைவானதையே அறிகிறோம் மற்றும் பேரரசு முழுவதிலும் நபருக்கு நபர் கிறிஸ்துவின் செய்தியைப் பரப்பிய ஏராளமான பிரசங்கியார்கள் மற்றும் போதகர்கள் பற்றி உண்மையில் நாம் எதுவுமே அறிவதில்லை.*

***வசனம் 10.*** *புறதெய்வ வணக்கத்தார்கள் மத்தியில் வாழ்ந்து, கிறிஸ்துவை அறிக்கையிட்டதால் பாடு அனுபவித்த கிறிஸ்தவர்கள், பின்வருவன போன்ற கடினமான கேள்விகளைத் தங்களுக்குள்ளும் மற்ற கிறிஸ்தவர்களிடத்திலும் கேட்டிருக்க வேண்டும். "நாம் திரும்பி ஆராதிக்கும் தேவன் நம்மைக் காக்கக் கூடியவராக இருந்தாரா? ஏன் அவர் அதைச் செய்யவில்லை?" அவர்கள் தங்கள் நண்பர்களும் குடும்பத்தவர்களும் சேவித்த கடவுள்களை ஆராதித்தபோது ஏளனத்தையும் தப்பெண்ணத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்ததில்லை. இந்த விஷயங்கள் நடக்கும்படி தேவன் அனுமதித்தது ஏன்? அவைகள் நீண்ட நாட்களுக்குத் தொடராது என்பதே பேதுருவின் பதிலாக இருந்தது.* **தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற ... தேவன்தாமே கொஞ்சக்காலம்**

*பாடநுபவிக்கிற* **உங்களுக்கு ... கிறிஸ்து இயேசுவுக்குள் தமது நித்திய மகிமையை** [**உங்களுக்கு அருளுவார்**] *இதற்கு முன்பும் அப்போஸ்தலர் இதே பதிலைக் கொடுத்திருந்தார் (1:8). பாடுகளை எதிர்கொண்டிருந்த வேளையில் பேதுரு, "தொடுவானத்தின் மீது உங்கள் கண்களைப் பதியுங்கள்" என்று கூறினார். பல ஆண்டுகளுக்கு முன்பு, சங்கீதக்காரர்களும் தங்கள் பாடுகளை இதே விதமாகவே புரிந்து கொண்டிருந்தனர். பொல்லாங்கை எதிர்கொண்ட வேளையில் அவர்கள், அது தற்காலிகமானதே என்பதை உய்த்து உணர்ந்திருந்தனர். நிறைவாக தேவனே வெற்றிபெறுவார். சங்கீதக்காரர் தமது எதிரிகளைப் பற்றி, "நிச்சயமாகவே நீர அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர்" என்று எழுதினார் (சங்கீதம் 73:18). தொடர்ந்து சங்கீதக்காரர், "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை" என்றும் எழுதினார் (சங்கீதம் 73:25).*

*பேதுருவின் சொற்றொடர்கள் ஒவ்வொன்றும், சுருக்கமான விளக்கத்திற்கு நம்மை அழைக்கின்றன.* **சகல கிருபையும்** *பொருந்திய தேவனுடைய பராமரிப்பிற்கு அவர்கள் தங்களை ஒப்புவித்திருந்தனர். 4:10ல் அப்போஸ்தலர், "தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப்" பற்றிக் குறிப்பிட்டிருந்தார். கிருபை என்பது இயேசு கிறிஸ்துவின் தேவனுக்குள் அதன் மிக உயர்வான அளவில் உணர்ந்து அறியப்படுகிறது. கிருபை என்பது தேவனோடு ஒருக்காலும் முடிந்து போவது இல்லை; அவரது இருப்பிற்கு அது அத்தியாவசியமானதாக உள்ளது. பேதுருவின் நிருபத்தைப் பெற்றவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் தங்கள் பாவங்களில் இருந்து மீட்கப்பட்டபோது அவரது கிருபையானது அவர்களால் உணர்ந்தறியப்பட்டது (3:21). அவர்கள் அவரது கிருபைக்குள் வாழ்ந்தனர்; இருந்தபோதிலும், கிருபை என்பது இன்னும் உணர்ந்தறியப்பட வேண்டியதாக இருந்தது. அவர்கள் அந்த நாளை முன்னெதிர்நோக்கி வாழ்ந்தனர்.*

*"தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற ... தேவன்" என்ற வார்த்தைகள், இந்த நிருபத்தின் தொடக்க வசனங்களை நினைவுக்குக் கொண்டுவருகின்றன. அப்போஸ்தலர் தமது வாசகர்களை "தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகள்" என்று விவரித்திருந்தார். அவர்கள் "கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும்" தேவனால் "முன்னறி"யப் பட்டிருந்தனர். அவர்கள் "இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக மறுபடியும் ஜெநிப்பிக்கப்" பட்டிருந்தனர். பேதுரு குறிப்பிட்டிருந்த மகிமை கிறிஸ்தவர்களுக்குத் தொடங்கி இருந்தது, ஆனால் மகிமை என்பது அவர்கள் மகிழ்வுடன் அனுபவித்து இருந்த மொத்த ஆசீர்வாதங்களைக் காட்டிலும் அதிகமானதாக இருந்தது. அது "நித்திய மகிமை"யாக இருந்தது. வசனங்கள் சுட்டிக்காண்பிக்கும் மகிமையானது தரத்தி லும் அளவிலும் இனி இன்னும் அதிகமாக உணர்ந்தறியப் படவேண்டியதாக இருந்தது. மகிமையின் பின்திரைக்கு எதிரே புரிந்துகொள்ளப்படும்போது பாடுகளின் கனம் சுமக்கத்தக்கதாக உள்ளது.*

*நான்கு எதிர்கால வினைச்சொற்களுடனும், அவற்றின் உறுதிப்பாட்டின் வலிவுடனும், "நித்திய மகிமையின்" முழுமையான உணர்ந்தறிதல்*

*வரும்வரையிலும் நீடியபொறுமையுடன் இருக்கும்படி பேதுரு தமது வாசகர்களுக்குப் புத்திமதி கூறினார். தற்காலத்தில் தேவன்தாமே அவர்களை* ***சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவார்*** *என்று அப்போஸ்தலர் வாக்குறுதி அளித்தார். "உங்களை அழைத்திருக்கிற தேவன்தாமே இவற்றைச் செய்வார் என்பதில் நீங்கள் நிச்சயமாய் இருக்கலாம்" என்று செயல்விளைவில் கூறுகிற வலிவான பெயர் உரிச்சொல் ஒன்று கிரேக்க மொழியில் கூடுதலாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் வித்தியாசப்பட்ட அர்த்தங்கள் பெரிதும் மாறுபாட்டை ஏற்படுத்தா விட்டாலும், ஒவ்வொரு வார்த்தையும் தனக்கே உரிய நுட்ப வேறுபாட்டைக் கொண்டுள்ளது. இவ்வினைச்சொற்களை இவ்வகையில் ஒன்றுகூட்டிக் காணும்போது, தேவன் தாம் அழைத்த மக்களைத் தமது மகிமை வெளிப்படும்வரையிலும் பாதுகாக்க முழுமையான வல்லமை கொண்டுள்ளார் என்பதை அடிக்கோடிட்டுக் குறிப்பிட முடிகிறது.*

*"சீர்ப்படுத்தி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (katartizo என்ற) வார்த்தை,* NIV *வேதாகமத்தில்* "restore" *என்று தரவழைக்கப்பட்டுள்ளது. மத்தேயு 4:21ல் செபதேயுவின் குமாரர்கள் தங்கள் வலைகளைப் "பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறபோது" என்று கூறுவதற்கு இந்த வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய மக்கள் தடுமாறுகிறபோது தேவன் அவர்களைப் பழுதுநீக்குகிறார் என்பதே இங்கு கருத்தாக உள்ளது; அவர்களின் பாவங்களை அவர் மன்னிக்கிறார். அவர்களை "மீளக்கட்டுவிக்க" மற்றும் அவர்களை "ஸ்திரப்படுத்தக்" கூடியவராக அவர் இருக்கிறார். "ஸ்திரப்படுத்த" என்ற வார்த்தை (stērizō) ஒருபொருளை ஏதொன்றினாலும் அசைக்க இயலாதபடிப் பாதுகாப்பாக நிலைநிறுத்துவதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. ஐசுவரியவான் மற்றும் லாசரு ஆகியோரைப் பற்றிய உவமையில் "பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது" என்பதை விவரிக்க இயேசு இதே வார்த்தையைப் பயன்படுத்தினார் (லூக்கா 16:26). "பலப்படுத்தி" என்று தரவழைக்கப்பட்டுள்ள வார்த்தை (sthenoō) முந்தின வார்த்தையுடன் நெருங்கி அர்த்தம் கொண்டதாக உள்ளது. இது புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. "நிலைநிறுத்துதல்" என்ற கடைசி வார்த்தை "உறுதியான அஸ்திபாரத்தின்மீது கட்டுதல்" என்று அர்த்தப்படுகிறது. தேவன் கிறிஸ்தவர்களை, நன்கு கட்டப்பட்ட ஒரு நகரம் அல்லது ஒரு மாபெரும் வீடு போன்று, உறுதியான அஸ்திபாரத்தின்மீது கட்டுவார்.*

***வசனம் 11.*** *இது, 4:11ல் அப்போஸ்தலர் எழுதியதைக் காட்டிலும் சுருக்கமான துதியாக உள்ளது. 4:11ல் இயேசுவே பாடப்பொருளாக இருந்தார், மற்றும் இங்கு தேவன் பாடப்பொருளாக இருக்கிறார். மற்றவர்களை மகிமைப்படுத்துபவரை வார்த்தைகள் இங்கு மகிமைப்படுத்துகின்றன. இதன் கிரேக்க வாக்கியத்தில் வெளிப்படையான வினைச்சொல் கிடையாது.* NASB *வேதாகமம், கட்டளை அல்லது விருப்பத்தேர்வுப் பாங்கில் வினைச்சொல் ஒன்றை இவ்விடத்தில் தருகிறது:* ***அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.*** *வினைச்சொல்லை சுட்டிக்காட்டும் பாங்கில் தரும்போது இந்தத் துதி இன்னும் பெலமானதாக உள்ளது:* ***"அவருக்கு***

மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருக்கிறது. ஆமென்" இதற்குச் சற்று முன்னர் தாம் பேதுரு நான்கு வினைச்சொற்களை எதிர்கால வகையில் பயன்படுத்தியிருந்தார் என்பதால், அதே சுட்டிக்காண்பித்தல் இங்கும் தக்கவைக்கப்பட்டிக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

---

**குறிப்புகள்**

[1]*முறைப்படி மூப்பர்கள் நியமிக்கப்படுதல் மற்றும் அவர்களின் பணி பற்றிய மற்ற கருத்துக்களுக்கு, பின்வரும் புத்தகத்தில் காணவும்:* Everett Ferguson, *The Church of Christ: A Biblical Ecclesiology for Today* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1996), 295–98, 310–27. [2]J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and of Jude,* Black's New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 198–99. [3]"Bishop" *என்ற ஆங்கில வார்த்தையானது episkopos என்ற கிரேக்கவார்த்தையின் மோசமான வடிவமாகும்.* KJV *வேதாகம மொழிபெயர்ப்பாளர்களை வழிநடத்திய அறிவுறுத்துதல்கள் மத்தியில், அவர்கள் சபைகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற விஷயமும் இருந்தது. இங்கிலாந்து சபையில் இருந்த சபைகளின் பொறுப்பு அலுவலர்கள்* "bishops" *என்று அழைக்கப்பட்டதால், இந்த கிரேக்க வார்த்தையை மொழிபெயர்ப்பதற்கும் அதே வார்த்தை பயன்படுத்தப்பட்டது.* [4]*(klēronomia என்ற) இவ்வார்த்தையின் கூட்டு வடிவம் 1 பேதுரு 1:4 மற்றும் வேறு இடத்தில் "சுதந்தரம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [5]J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), 286. [6]C. S. Lewis, *Mere Christianity* (New York: Macmillan Co., 1961), 94. [7]*கிரேக்க மொழியில் இதற்கு, "இளைஞர்கள்" மற்றும் "மூப்பர்கள்" என்ற இணை பெயர் உரிச்சொல்கள் உள்ளன. இந்தப் பெயர் உரிச்சொற்கள் ஆண்பால் பன்மைச் சொற்களாக இருப்பதால், கருத்தை ஏற்படுத்த இளைஞர் என்பதற்குப் பின்னால் "மனிதர்கள்"* [*அதாவது* "younger" *என்பதற்குப் பின்னால்* "men" *என்பதை*] *மொழிபெயர்ப்பாளர்கள் கூடுதலாகச் சேர்த்தனர், ஆனால் "மூப்பர்கள்" என்ற சொல்லின் விஷயத்தில் இந்தக் கூடுகை அவசியம் அற்றதாக உள்ளது.* [8]Alan M. Stibbs and Andrew F. Walls, *The First Epistle General of Peter,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 170. [9]J. Goetzmann, "Care, Anxiety," in *The New International Dictionary of New Testament Theology,* ed. Colin Brown (Grand Rapids, Mich.: Zondervan, 1976), 1:277. [10]R. E. Enlow, "Anxiety," in *Evangelical Dictionary of Biblical Theology,* ed. Walter A. Elwell (Grand Rapids, Mich.: Baker Books, 1996), 28.

[11]Wisdom of Solomon 12:13 (NRSV). [12]John Stott, *The Contemporary Christian* (Leicester, U.K.: Inter-Varsity Press, 1992), 335.